RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 28, 01 ஏப்ரல் 2022 இதழ்:- 49

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

ஈழநாடு
மின்னிதழ்
eelanadu.ca

# கோத்தபாயாவின் வீடு பொது மக்களால் சுற்றி வளைப்பு!

## முப்படைகள் குவிப்பு! மின்சாரம் துண்டிக்கப்பட்டு பொதுமக்கள் மீது கண்ணீர் புகைப்பிரயோகம்!

(31 மார்ச் 2022 வியாழக்கிழமை மாலை 6.15)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மிரிஹான பெங்கிரிவத்த இல்ல வீதியை சுற்றி வளைத்த மக்கள் கூட்டம் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. வீதியில் தடைகளை போடுவதற்கு பொலிசார் முயன்ற போதும் பொதுமக்கள் அந்தத் தடைகளை தகர்த்துக் கொண்டு முன்னேறிய வண்ணமுள்ளதாக எமது கொழும்புச் செய்தியாளர் தெரிவிக்கின்றார். ஜனாதிபதியின் இல்லத்துக்கு செல்லும் பாதையை மறித்தே போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மிரிஹானவில் (6ம் பக்கம் பார்க்க)



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# கோட்டா - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பேச்சு:-

# இந்தியா முழுத் திருப்தி தெரிவிப்பு!

ஜனாதிதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசுத் தரப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த 25ஆம் திகதி இடம் பெற்ற நேரடிப் பேச்சுக்கள் நம்பிக்கை யைக் கட்டி வளர்த்து, நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விதத்தில் அமைந்தமையை (3ம் பக்கம் பார்க்க)



## கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற முதல் பேச்சுவார்த்தையில் பேசியது என்ன?

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

### Warden/St Clair

**Scarborough** **$599,900**
Bedrooms: 2+1 Washrooms: 1
Step To Warden Subway Station

### Warden Ave/Lawrence Ave

**Scarborough** **$649,000**
Bedrooms: 2 Washrooms: 2
Steps To Ttc, Direct Bus To Subway

### Simcoe St N/Conlin Rd

**Oshawa** **$690,000**
Bedrooms: 2 Washrooms: 2
3-Storey Corner Town-Home

### Eglinton/Markham

**Scarborough** **$725,000**
Bedrooms: 3 Washrooms: 2
Renovated W/O To The Balcony

### Park /Phillip Murray

**Oshawa** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
52Ft Frontage! Close Lake

### Rossland / Ravenscroft

**Ajax** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Main & Baker Hill

**Stouffville** **$899,000**
Bedrooms: 2 Washrooms: 3
Bright & Spacious End Freehold

### John W Taylor/Ferris Lane

**New Tecumseth** **$1,079,000**
Bedrooms: 4 Washrooms: 3
Hardwood Floors, Open Concept

### Salem Rd/Thackery Dr

**Ajax** **$1,109,000**
Bedrooms: 3 Washrooms: 3
Hardwood Floors, Fin. Basement

### S. Wood Pkwy/ Edenbrook Hill

**Brampton** **$1,399,999**
Bedrooms: 3 Washrooms: 3
Open Conceptl/O For Entertaining!

### Markham/Ellesmere

**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated

### Ellesmere/Conlins

**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Ellesmere/Birchmount

**Scarborough** **$539,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Morningside/ Ellesmere

**Scarborough** **$399,000**
Bedrooms: 1 Washrooms: 1
Walking Distance To Ut Scarborough

### Finch/Middlefield


**Scarborough** **$1,350**
Bedrooms: 1 Washrooms: 1
Sep.Entrance basement For Rent.

### Birchmount/Ellesmere


**Scarborough** **$1,200**
Bedrooms: 1 Washrooms: 1
Seperate Entrance, Basement Apart.

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)

3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

4 AGP MART
4A WADE AVE
TORONTO

5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098


04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# கோட்டா - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பேச்சு
# இந்தியா முழுத் திருப்தி தெரிவிப்பு!



ஜனாதிதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசுத் தரப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த 25ஆம் திகதி இடம் பெற்ற நேரடிப் பேச்சுக்கள் நம்பிக்கையைக் கட்டி வளர்த்து, நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விதத்தில் அமைந்தமையை அறிந்து கொண்டு, அது தொடர்பில் முழு திருப்தியும் வரவேற்பும் வெளியிட்டிருக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்..ஜெய்சங்கர்.

கொழும்பு சென்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் 28 மார்ச் 2022 மாலை 4.30 மணி முதல் கொழும்பு இந்திய ஹவுஸில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் குழுவில் சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கு பற்றினர்.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் கொழும்புக்கானி இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் அதிகாரிகள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபயா தலைமையிலான அரசுக் குழுவினருடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்து சம்பந்தனும் சுமந்திரனும் முதலில் விளக்கினர். அவற்றைச் செவிமடுத்த இந்திய அமைச்சர் அதன் பின்னர்அந்தப் பேச்சுத் தொடர்பில் இந்தியாவின் முழுத் திருப்தியையும் வரவேற்பையும் வெளியிட்டார் என அறிய வந்தது.

ஜனாதிபதி கோட்டாபயவுடனான சந்திப்பின் போதும் அவரும் கூட்டமைப்புடன் தாங்கள் நடத்திய பேச்சுக்களை விவரித்தார். இப்போது நீங்கள் சொன்ன அதே தகவல்களை அவரும் சொன்னார். என்னுடைய அனுபவத்தில் இப்படியான பேச்சுத் தொடர்பில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே ஒரே விதமாகக் கருத்து வெளியிடுவது இதுவே முதல் சந்தர்ப்பம். ஆகையால் இந்தப் பேச்சுகள் இரு தரப்பு நம்பிக்கையைக் கட்டி வளர்த்து நல்லிணக்கத்தை மேம்படுத்தும் என நான் நம்புகிறேன். என்றார்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஒரு செய்திக் குறிப்பு வெளியிட்டது. அதன் விவரம் வருமாறு:-

வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய் சங்கர் தமது இலங்கை விஜயத்தின் போது இன்று ஆர்.சம்பந்தன் எம்பி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடினார்.

மார்ச் 25ஆம் திகதி இலங்கை அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு மற்றும் அதை ஒட்டிய இந்திய நிகழ்வுகளை வெளிவிவகார அமைச்சருக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விளக்கியது.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணிப் பயன்பாடு, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல், புலம்பெயர்ந்தோர் முதலீடு போன்ற விடயங்கள் பேசப்பட்டது என கூட்டமைப்பினர் தெரியப்படுத்தினர்.

இதற்கு முன்னதாக இலங்கை ஜனாதிபதியை வெளிவிவகார அமைச்சர் சந்தித்த போதும் இலங்கை அரசுக்கும் தமீத்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான ஊடாட்டம், தொடர்பாடல்கள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டன. மாலையில் இலங்கை வெளிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்தித்த போதும் இது தொடர்பில் மேலதிக புரிதலுக்கான விடயங்களும் விவரிக்கப்பட்டிருந்தன

இந்திய வெளிவிவகார அமைச்சர் தன்னுடைய பங்குக்கு, அரசு - கூட்டமைப்புப் பேச்சில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் சாதகமான அம்சங்களை வரவேற்றுக் கருத்து வெளியிட்டார்.

ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை எதிர் பார்க்கும் தமிழர்களின் அபிலாசைகள் நிறைவு செய்யப்படுவதை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது என்ற இந்திய அரசின் நிலைப்பாட்டை அவர் மீள உறுதிப்படுத்தினார். வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதார மீளெழுச்சிக்கு இந்தியா வழங்கும் அபிவிருத்திப் பங்களிப்பும் வெளிவிவகார அமைச்சர் பங்கு பற்றிய எல்லா கூட்டங்களிலும் மெச்சி வலியுறுத்தப்பட்டன இலங்கையின் பிரதமருடன் இணைந்து யாழ்ப்பாணம் (8ம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வுக்காக அரசுடன் தொடர்ந்து பேசுவோம்!

நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசுடன் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். எனினும், அரைகுறையான அரசியல் தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். இதை ஜனாதிபதியிடம் நேரில் எடுத்துரைத்துளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் நாங்கள் தெரிவித்தோம். நியாயமான - நிரந்தரமான - நடைமுறைப்படுத்தக்கூடிய - அதியுச்ச அதிகாரப்பகிர்வு அடங்கிய ஒரு அரசியல் தீர்வு வராவிட்டால் அதை நாங்கள் ஏற்கமாட்டோம். இற்றைவரை நடைபெற்ற கருமங்களின் அடிப்படையில் - இற்றை வரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணவேண்டும்.

இதற்காக அரசுடன் நாங்கள் வெளிப்படையாகத் தொடர்ந்து பேசத் தயார். தீர்வுக் கான எமது இந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் உறுதியாக நிற்போம் என்றும் இதிலிருந்து ஒரு போதும் பின்வாங்க மாட்டோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறினோம். (8ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# சர்வதேசத்தை ஏமாற்ற முனைகிறது ஸ்ரீலங்கா அரசு! மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் தெரிவிப்பு!

சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் மேம் போக்கான மாற்றங்களை மேற்கொண்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என சர்வதேச அளவில் அதிகரிக்கும் அழுத்தங்களில் இருந்து தப்புவதற்காக மேம் போக்கான மாற்றங்களுடன் திருத்தச் சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது.

ஐக்கியநாடுகளின் மனித உரிமை நிபுணர்களும், ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்கனவே இந்த திருத்தங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மிகவும் ஆபத்தான ஏற்பாடுகளிற்கு தீர்வை காண்பதற்கு போதுமானவையில்லை என தெரிவித்துள்ளன.

தனது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் குழுநிலை விவாதத்தை தவிர்த்துக் கொண்டது.

குழுநிலை விவாதத்தை முன்னெடுத்திருந்தால் மனித உரிமை குழுக்களின் உள்ளீடுகளை உள்வாங்கியிருக்கலாம், இது இலங்கை தனது சட்டமூலத்தை சர்வதேச தராதரத்திற்கு ஏற்றதாக மாற்றுவதற்கான சிறந்த வாய்ப்பாக இது காணப்பட்டது.

நான்கு தசாப்தங்களிற்கு மேலாக இலங்கை அதிகாரிகள் தன்னிச்சையாக தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதையை நீடிப்பதற்காகவும் — சிறுபான்மை சமூகத்தினரையும் சிவில் சமூகத்தினரையும் இலக்கு வைப்பதற்காகவும் பயன்படுத்தியுள்ளனர்.

திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டாலும், பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கம் எவரையும் ஒரு வருட காலத்திற்கு குற்றச்சாட்டுகளை சுமத்தாமல் எந்த ஆதாரங்களும் இல்லாமல் பிணைக்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் தடுத்து வைப்பதற்கு தொடர்ந்தும் அனுமதிக்கின்றது.




புதிய திருத்தங்கள் சித்திரவதையிலிருந்து எந்த பாதுகாப்பையும் வழங்கவில்லை, மாறாக பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலான தண்டனைகள் காரணமாக சித்திரவதைகளை ஊக்குவிக்கின்றது.

பொருளாதாரத்தை தவறான விதத்தில் கையாண்டமைக்காக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நிர்வாகம் பாரிய ஆர்ப்பாட்டங்களை எதிர்கொள்கின்றது.

பொருளாதாரம் தவறான விதத்தில் கையாளப்பட்டமை அத்தியாவசிய பொருட்களிற்கு பாரிய தட்டுப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளதுடன் பணவீக்க அதிகரிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச நிதி உதவியை கோரும் இலங்கை அரசாங்கம் தொடரும் மனித உரிமை துஸ்பிரயோகம் காரணமாக அழுத்தங்களிற்குள்ளாகியுள்ள நிலையில் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்க முயல்கின்றது.

ஆனாலும் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் தொடர்கின்றன – பயங்கரவாத தடைச்சட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அன்று பிரபலமான மனித உரிமை சட்டத்தரணி பொலிஸின் பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டார், சட்டபூ ர்வமான செயற்பாடுகளை இலக்குவைப்பதற்கு அரசாங்கம் பயங்கரவாதத்தை பயன்படுத்தும் இன்னுமொரு சம்பவம் இதுவாகும்.

மேலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்ற எச்சரிக்கையை தொடர்ந்து பொலிஸார் பின்னர் அந்த அழைப்பாணையை கைவிட்டனர்.

2009இல் முடிவடைந்த யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் இராணுவத்தினரின் பிடியிலிருந்தவேளை பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களின் ஆர்ப்பாட்டங்களை பொலிஸார் கடந்தவாரம் ஒடுக்கினார்கள்.

இலங்கைக்கான சமீபத்தைய விஜயத்தின் போது அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களிற்கான உதவி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுயுலண்ட் கண்காணிப்புகளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தலை துன்புறுத்தலை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கை உணவு எரிபொருள் பற்றாக் குறைகளை எதிர்கொள்வதால் அதற்கு சர்வதேச உதவி அவசரமாக தேவைப் படுகின்றது, ஆனால் அரசாங்கம் சர்வதேசத்தில் உள்ள தனது சகாக்களும் நண்பர்களும் நேர்மையான மனித உரிமை சீர்திருத்தங்களை, துஸ்பிரயோகங்களை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நீதியை நிலைநாட்டுவதற்கான உண்மையான நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாக வாசிக்கலாம்.

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

மெக்சிக்கோ சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், மூன்றாவது கிழமைகளிலும், மெக்சிகோவில் உள்ள வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும் 2022 தை மாதம் தொடக்கம், மார்கழிமாதம் வரை. 7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது.



| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| SALE PRICE C$ 1,000.00 | SALE PRICE C$ 1,250.00 | SALE PRICE C$ 1,500.00 | SALE PRICE C$ 1,750.00 | SALE PRICE C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# புலம் பெயர்ந்த தமிழர்கள் மீதான தடை குறித்து மீள் பரிசீலனை செய்ய அரசு தயார்

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மீள் பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய வர வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது ராஜபக்ஷ அரசு ஆட்சிக்கு வந்ததும் தடைகளை விதித்திருந்தது. இந்த நிலை யில் புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு நாட்டுக்குள் வருவது என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.



புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை அரசு மீள் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றது. கூட்டமைப்புடனான சந்திப்பின் போதும் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது என்று பீரிஸ் குறிப்பிட்டார்

# போரின் போது இலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட இரகசிய ஆவணங்களில் மாற்றம் செய்தது பிரிட்டன்!

இலங்கையின் உள்நாட்டு போரின் போது என்ன நடைபெற்றது என்பது குறித்த தெளிவாக அறிந்து கொள்வதற்கு இலங்கையின் உள்நாட்டு போரின்போது இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகத்திலிருந்து பிரிட்டனிற்கு அனுப்பப்பட்ட இரகசிய பரிமாற்றங்களில் உள்ள திருத்தங்களை மாற்ற வேண்டும் என மைக்கல் நேஸ்பி பிரபு தெரிவித்துள்ளார்.



2007 முதல் 2009 வரையான காலப் பகுதியில் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி பிரிட்டனிற்கு அனுப்பிய இரகசிய ஆவணங்கள் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் அரசாங்கம் இரகசிய ஆவணங்கள் என வகைப்படுத்திய ஆவணங்களை நேஸ்பி பிரபு பிரிட்டனின் தகவல் சுதந்திர சட்டத்தை பயன்படுத்தி கேள்விக்கு உட்படுத்தினார்.

பிரிட்டனில் அந்த ஆவணங்களில் பெரும் மாற்றங்களை மேற்கொண்டார்கள் எனக்கு அந்த திருத்தங்கள் குறித்து திருப்தியில்லை என்பதை நான் வெளிப்படையாக தெரிவிக்கின்றேன், நான் இது குறித்து சில காலமாக தெரிவித்து வருகின்றேன், அந்த திருத்தங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் நான் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடப் போகின்றேன் என தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பரடைஸ் லொஸ்ட் பரடைஸ் ரிகெய்ன்ட் என்ற நூல் வெளியீட்டு நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

# போரை நிறுத்தினால் உக்ரேன் நேட்டோவில் சேராது! பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக தகவல்!

உக்ரைன் ரஷ்யா சமாதானக் குழுக்கள் இடையே துருக்கியில் 29 மார்ச் 2022 நடைபெற்ற நேரடிப் பேச்சுக்கள் குறிப்பிடக்கூடிய முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக துருக்கி அங்காராவில் அந்நாட்டின் வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா போரை நிறுத்தித் தனது படைகளை முற்றாக வெளியேற்றுமானால் அதற்குத் தனது தரப்பு விட்டுக் கொடுப்பாக நேட்டோவில் இணையும் விருப்பத்தை உக்ரைன் கைவிடும். அத்துடன் டொன்பாஸ் பிராந்தியத்தைத் தற்காலிகமாகத் தனது பிடியில் இருந்து விலக்கி விடவும் அது இணக்கம் தெரிவித்துள்ளது. பேச்சு மேசையில் உக்ரைன் தரப்பு முன்வைத்த திட்டங்கள் வருமாறு

பாதுகாப்பு உத்தரவாதம் :சட்ட ரீதியாகஉத்தரவாதப் படுத்தப்பட்ட பாதுகாப்பு உத்தரவாதம் ஒன்றை மேற்கு நாடுகளிடம் இருந்து உக்ரைன் எதிர்பார்க்கிறது. நேட்டோ வழங்குகின்ற பாதுகாப்புக்கு நிகரான அல்லது அதைவிடச் சிறந்ததாக அந்த உத்தரவாதம் அமைய வேண்டும். நாங்கள் சர்வதேச பொறிமுறை ஒன்றுடன் கூடிய பாதுகாப்பு உத்தரவாதத்தை எதிர்பார்க்கிறோம். உத்தரவாத நாடுகள் நேட்டோ உடன்படிக்கையின் சரத்து 5 போன்று விரைந்து பாதுகாப்பு உதவி அளிக்கும் விதமான விதிகளோடு அது அமைய வேண்டும் என்று உக்ரைன்தரப்புப் பிரதிநிதி கூறியிருக்கிறார்

நேட்டோ :பாதுகாப்பு உத்தரவாதம் நடைமுறைக்கு வந்தவுடன் நேட்டோவில்இணைவது என்ற தனது அபிலாசையை உக்ரைன் கைவிடும்.

பாதுகாப்பு உத்தரவாதம் கிடைத்த பிறகு தனது எல்லைக்குள் வெளிநாட்டுபடைத் தளங்கள் எதனையும் உக்ரைன் வைத்திருக்க மாட்டாது. பாதுகாப்பு உத்தரவாத உடன்படிக்கை உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதைக் கட்டுப்படுத்தாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். உக்ரைன் தரப்பின் இந்த யோசனைகள் அடங்கிய திட்டத்தை ரஷ்யா சாதகமாகப் பரிசீலிக்க இணங்கியுள்ளது.

சுமார் மூன்று மணி நேரம் நீடித்த இன்றைய பேச்சுக்களின் முன்னேற்றத்தைக் குறிக்கின்ற ஒரு சாதக சமிக்ஞையாக தலைநகர் கீவின் சுற்று வட்டாரம் உட்பட உக்ரைனின் சில பகுதிகளில் ரஷ்யாவின் போர் நடவடிக்கைகள் தணிக்கப் படவுள்ளன என்று ரஷ்யப் பிரதிநிதி அறிவித்துள்ளார்.

மரியுபோல் நகரில் இருந்து மக்களை வெளியேற்றுவதற்கான சர்வதேச மீட்பு முயற்சிக்குப் புடினின் இணக்கத்தைப் பெறுவதற்காக பிரான்ஸ் அதிபர் தொடர்பு கொண்டார்.

# ஜனாதிபதி கூட்டமைப்பு சந்திப்பு?

கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நடந்து முடிந்திருக்கின்றது. இவ்வாறானதொரு சந்திப்பை, சம்பந்தன் பல மாதங்களாக எதிர்பார்த்திருந்தார். தமிழ் மக்களுக்கு பிரத்தியேக அரசியல் பிரச்சனைகள் இந்த நாட்டில் இல்லையென்று வாதிட்டு வந்த ராஜபக்ஷ தரப்பு, கூட்டமைப்பை சந்தித்திருப்பதும், கூட்டமைப்பு அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்தியிருப்பதும், அரசாங்கத்தின் இறங்கு நிலைக்கு சான்றாகும்.

ஒருவேளை, சூழ்நிலையை சமாளிக்கும் நோக்கில் இவ்வாறானதொரு சந்திப்பிற்கு ஜனாதிபதி இறங்கியிருந்தாலும் கூட, கூட்டமைப்புடன் பேசுதல் என்பது, அவரது முன்னைய நிலைப்பாடுகள் அவருக்கு கைகொடுக்கவில்லை என்பதையே காண்பிக்கின்றது. அதேவேளை, சம்பந்தனும் கடும் தொனியில் சில விடயங்களை வலியுறுத்தியிருக்கின்றார். அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தையே அமுல்படுத்த முடியா விட்டால், அதற்கு மேல் இந்த அரசாங்கத்தால் எதனை செய்ய முடியும்?

கூட்டமைப்பின் இந்தக் கேள்விக்கு, அரசாங்கத்திடம் பதிலில்லை. அதேவேளை, அரசாங்கம் புதியதோர் அரசியல் யாப்பை கொண்டு வர முற்பட்டால் அதற்கு அரசாங்கத்திற்குள் எந்தளவு ஆதரவு இருக்குமென்பதும் பெரியதொரு கேள்வி. விரைவில் அரசாங்கத்தின் பெருபான்மையை இல்லாமலாக்குவோம் என்னும் பங்காளிகளின் சூழுரைகள் மத்தியில் தான், கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது.

ஜனாதிபதியின் உடல் மொழியும் முன்னைய கோட்டாபய ராஜபக்ஷவை காண்பிக்கவில்லை. ஜனாதிபதி கூட்டமைப்பை எவ்வாறான நோக்கத்திலும் சந்தித்திருக்கலாம். ஆனால், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்பங்களையும் கூட்டமைப்பினர் எவ்வாறு கையாளுகின்றனர் என்பது தான் முக்கியமானது.

அந்த அடிப்படையில், கூட்டமைப்பினர் முன்வைத்திருக்கும் விடயங்களுக்கு ஜனாதிபதி எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றார் என்பதைப் பொறுத்து, கூட்டமைப்பினர் தொடர்ந்தும் விடயங்களை முன்னெடுக்கலாம்.

நல்லிணக்கத்தின் ஆரம்பமாக – குறிப்பிட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணி அபகரிப்பு தொடர்பான குற்றச் சாட்டுகளுக்கு பதிலளித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் முன்னேற்றங்களை காண்பித்தால், கூட்டமைப்பு தொடர்ந்தும் உரையாடுவதில் தவறில்லை.

ஆனால், அரசாங்கம் வழமைபோல் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கில் செயற்படுமாக இருந்தால், இந்த முதல் சந்திப்புடன் கூட்டமைப்பு விடயங்களை கைவிட வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெறுங்கையுடன் திருப்பி வருவது அரசியலாக இருக்க முடியாது. அதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையை கையாளுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக, இவ்வாறான சந்திப்புக்களை அரசாங்கம் கையாள முற்படுவது தொடர்பிலும் கூட்டமைப்பு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

எந்த விடயமாக இருந்தாலும், அனைத்தும் இறுதியில் ஒரு மேசையில் தான் விவாதிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இலங்கைக்குள் பிரச்சனைகளை கையாளுவதற்கு விரும்பியோ விரும்பாமலோ, ஆளும் தரப்புடன்தான் பேசியாக வேண்டும். அவர்கள் எவராகவும் இருக்கலாம். ஆனால், எந்தவொரு பேச்சுவார்த்தையும், தமிழர்களின் விடயத்தில் முன்நோக்கி பயணிப்பதற்கான வாய்ப்பாக இருக்க வேண்டும். ஒரு வேளை முன்நோக்கி பயணிக்க முடியாவிட்டாலும் கூட, தமிழர்களுக்கு

ஓரளவு சாதகமாக (8ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# கோத்தபாயாவின் வீடு பொது மக்களால் சுற்றி வளைப்பு!

## முப்படைகள் குவிப்பு! மின்சாரம் துண்டிக்கப்பட்டு பொதுமக்கள் மீது கண்ணீர் புகைப்பிரயோகம்!



(31 மார்ச் 2022 வியாழக்கிழமை மாலை 6.15)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மிரிஹான பெங்கிரிவத்த இல்ல வீதியை சுற்றி வளைத்த மக்கள் கூட்டம் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. வீதியில் தடைகளை போடுவதற்கு பொலிசார் முயன்ற போதும் பொதுமக்கள் அந்தத் தடைகளை தகர்த்துக் கொண்டு முன்னேறிய வண்ணமுள்ளதாக எமது கொழும்புச் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

ஜனாதிபதியின் இல்லத்துக்கு செல்லும் பாதையை மறித்தே போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மிரிஹானவில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதோடு, பதற்ற நிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதியின் இல்லத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி இல்லம் நோக்கி செல்லும் போராட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து வருகின்றனர். நாட்டு மக்கள் தற்போது முகங்கொடுத்து வரும் எரிபொருள், காஸ், மின்சாரம் உள்ளிட்டப் பிரச்சினைகளுக்கு எதிராகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. போராட்ட குழுவை கலைப்பதற்காக கண்ணீர் புகை மற்றும் நீர் தாக்குதலை காவல்துறையினர் நடத்தினர். இவ்வாறு தண்ணீர் பிரயோக தாக்குதலுக்கு மத்தியிலும் மக்கள் அரச தலைவரின் இல்லத்தின் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அரச தலைவர் வீட்டின் முன்பாக போராட்டம் நடத்துபவர்களை காவல்துறையினர் கலைக்க முற்பட்டுள்ளனர். இதன்போது காவல்துறையினர் மீது போராட்டக்காரர்கள் கற்களை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தப்படுகிறது. கடந்த பல மாதங்களாக இலங்கையில் நிலவி வரும் டொலர் இருப்பு பற்றாக்குறை காரணமாக பாரிய பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பொருட்களின் விலை உயர்ந்துள்ளதுடன் எரிவாயு மற்றும் எரிபொருள் என்பவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. மின்சார விநியோகம் தடை செய்யப்பட்டு வந்த நிலையில் புதன்கிழமை முதல் 13 மணி நேர மின்சார விநியோக தடை அமுலுக்கு வந்துள்ளது. இதனையடுத்தே மக்கள் கோட்டாபயவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரச தலைவரின் இல்லத்திற்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றுவரும் நிலையில் போராட்டக்காரர்களை கலைக்க காவல்துறையினர் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் குறித்த பகுதியில் தற்போது மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையால் போடப்பட்டிருந்த தடுப்புச்சுவர் போராட்டக்காரர்களால் உடைக்கப்பட்ட நிலையில் விசேட அதிரடிப் படையினர் அழைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குறித்த பகுதியில் இணைய இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்சவின் இல்லம் அமைந்துள்ள மிரிஹான பகுதியில் பெருமளவான மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் தற்போது முதலாவது காவல்துறை தடையினை தகர்த்தெறிந்து போராட்டக்காரர்கள் முன்னேறிச் சென்றுள்ளனர். இனவாதத்தையும் - மத வாதத்தையும் உருவாக்கிய குடும்பத்தை அழிக்க வேண்டும் என்று கோஷமிட்டப்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா அரசதலைவர் கோட்டாபய ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள மிரிஹான -பகிரிவத்த மாவத்தை பகுதியில் பெருமளவான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக குறித்த பகுதியில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் சம்பவ இடத்தில் இராணுவ வீரர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலை அத்தி யாவசியப் பொருட்களின் விலையேற்றம் எரிபொருள் தட்டுப்பாடுஇ குறிப்பாக 13 மணி நேர மின் வெட்டு காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடாக சுயமாகத் திரண்டெ ழுந்த மக்களே அரச தலைவரின் வீட்டின் முன்பு திரண்டு கோசங்களை எழுப்பி வருகின்றார்கள். அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலக வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகுமாக இருந்தால் இராணுவ ஆட்சி உருவாகலாம் என்ற அச்சமும் கொழும்புச் செய்தியாளர் தெரிவிக்கின்றார்





# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற முதல் பேச்சுவார்த்தையில் பேசியது என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கும் இடையில் முதல் முறையாக கடந்த 25 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை விசேட சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.



அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடும் நோக்கிலேயே இந்த சந்திப்பு இடம் பெற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். புதிய அரசியலமைப்பின் ஊடாக, அரசியல் தீர்வொன்றை பெறுவது குறித்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இரண்டு மாத காலத்திற்குள் மொழி பெயர்ப்புக்களுடன் கிடைக்கும் எனவும், அதிகார பகிர்வு உள்ளிட்ட புதிய அரசியல் குறித்த விடயங்கள் அதன் பின்னர் தொடர முடியும் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உறுதியளித்ததாக, எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இந்த விடயத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்து ள்ளது.

இதேவேளை இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, செய்ய வேண்டிய நான்கு விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ தேவைக்காக இனி காணிகள் சுவிகரிக்கப்படாது என ஜனாதிபதி இன்றைய பேச்சுவார்த்தையில் உத்தரவாதம் வழங்கியுள்ளார்.

அத்துடன் பிரதேச சபை எல்லைகள், மாவட்ட எல்லைகள், கரையோர எல்லைகள் ஆகியவை மாற்றப்படுவதற்கான சில முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கைகள் தற்போதைக்கு செய்யப்படாது எனவும் ஜனாதிபதி உறுதி வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் காலப் பகுதியில் அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் உறுதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் விசேட சட்டங்களின் கீழ் நில ஆக்கிரமிப்பும் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் விவகாரத்தில், காணாமல் போனோரின் உறவுகளுக்கு வழங்கப்படுவதாக கூறப்படும் ஒரு லட்சம் ரூபா பணமானது, காணாமல் போனோருக்கான இழப்பீடு அல்லவெனவும், அது தற்காலிக கொடுப்பனவு எனவும் ஜனாதிபதி தரப்பினர் இதன் போது கூறியுள்ளனர்.

காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அன்றைய சந்திப்பில் உறுதி வழங்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் பொருளாதார மீள் எழுச்சிக்காக ஒரு விசேட அபிவிருத்தி நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இந்த நிதியத்தின் ஊடாக புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை வருவிப்பதற்கு அரசாங்கம் அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் எனவும் உறுதி வழங்கப்பட்டுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நிலையில் அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தை, ஜனாதிபதி நிபுணர் குழுவின் மொழி பெயர்ப்பு அறிக்கை இரண்டு மாதங்களுக்குள் கிடைக்கப் பெற்றதை அடுத்து தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை பொருளாதார ரீதியில் நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கை**

நாட்டை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்' என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. நாட்டு மக்கள் அனைவரினதும் தலைவராக, அனைத்து மக்கள் மீதும் தாம் ஒரு சேர அவதானத்தைச் செலுத்துவதாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுவித்தல், குற்றஞ்ச ாட்டப்பட்டு வழக்குத் தொடரப்படாத சந்தேக நபர்கள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உண்மையைக் கண்டறியும் பொறி முறையை ஆரம்பித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல், காணாமற் போனோர் தொடர்பான பிரச்னைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அத்துடன் தொடர்ந்தும் ஒன்றிணை ந்து செயற்படுவதன் மூலம், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மக்களின் நோக்கங்களையும் நிறைவேற்றி நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்த முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வின் மூலம், நாட்டை சுபீட்சத்தை நோக்கி நகர்த்துவது தமது எதிர்பார்ப்பாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறுகின்றது.

தாம் ஒரு நாடாக ஒன்றுபட வேண்டும். ஒரு நாடு, ஒரே மக்கள் என்று செயற்பட்டு, நாட்டின் தற்போதைய நிலைமையில் இருந்து, நாட்டை விடுவிப்பது அனைத்துத் தரப்பினரின் பொறுப்பாகும் என இரா.சம்பந்தன் தெரிவித்தார். இலங்கை, கிழக்கு சுவிட்சர்லாந்தாக மாறுவதை காண விரும்புவதாக இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

நீண்ட காலமாக கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள், நீண்டகாலமாக பயிர்ச் செய்யப்பட்ட காணிகளை விடுவித்தல், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தல், புதிய அரசியலமைப்பு தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதன் பின்னர் அதில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடுதல், வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

# சம்பந்தரின் ஆவேசத்தால் அதிர்ந்தது பேச்சு அரங்கம்!

நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஆகியோர் 13ஐ நடை முறைப்படுத்தவும், தேர்தலை நடத்துவது தொடர்பிலும் சாட்டுக்களைக் கூறிய நிலையில் மேசையில் ஓங்கி அறைந்து ஆவேசமாக பேசிய சம்பந்தனால் பேச்சு அரங்கமே அதிர்ந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு 25 மார்ச் 2022 ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. சுமார் மூன்று மணி நேரம் தொடர்ந்த இந்தப் பேச்சின்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்த சம்பந்தன், மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.



இதன்போது குறுக்கிட்ட நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோர், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன என்றும் முக்கியமாக காணி, பொலிஸ் அதிகாரங்களை தரமுடியாது என்ற ரீதியிலும் கருத்துக்களை வெளியிட்டனர். அத்துடன், தேர்தலை நடத்த முடியாது இருப்பதற்கும் கடந்த நல்லாட்சி அரசாங்கமே காரணம் என்றும் எல்லை நிர்ணயம் தொடர்பாக சட்டம் நிறைவேற்றப்படவேண்டும்(17ம் பக்கம்)


# 31ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி அங்கயற்கண்ணி குமாரசாமி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அங்கயற்கண்ணி குமாரசாமி அவர்களுடைய 31ம் நாள் நினைவு நாள் 04 ஏப்ரல் 2022 திங்கட் கிழமையாகும். அன்றைய தினமும் மறுநாள் 05 ஏப்ரல் 2022 செவ்வாய்க்கிழமையும் 06 ஏப்ரலை 2022 புதன்கிழமையும் (3 நாட்கள்) அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லம், அன்பு இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி அங்கயற்கண்ணி குமாரசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# தமிழர்களின் காணி அபகரிப்பு குறித்து இராணுவத் தளபதிக்கு ஏதுவும் தெரியாதாம்! சுமந்திரனிடம் கேட்டறிந்தாராம்!





வடக்கு கிழக்கில் இராணுவத்தினரால் பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப் படுகின்றன என்று முன் வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திர னுடன் 25 மார்ச் 2022 வெள்ளிக்கழமை தொலைபேசியில் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே 25 மார்ச் 2022 வெள்ளிக் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பேச்சு இடம்பெற்றது.

இந்த பேச்சின்போது தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டப்பட்டன.

தமிழ் மக்களின் காணிகள் இராணுவத் தினரால் அபகரிக்கப்படுகின்றமை குறி த்து கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டதுடன் இதனை உடனடியாக தடுத்து நிறுத்து மாறும் வலியுறுத்தினர்.

இதற்கான நடவடிக்கையை உடனடி யாக மேற் கொள்வதாக ஜனாதிபதி கூட்டமைப்பிடம் உறுதியளித்தார்.

இந்த பேச்சு முடிந்து சிறிது நேரத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சுமந்திரன் எம்.பியை தொலை பேசியில் தொடர்பு கொண்டார். இராணு வத்தினரால் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாக கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் முறையிட்டமை குறி த்து கேட்டறிந்தார்.

அத்துடன் இராணுவத்தினரின் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் குறித்து தான் உடனடியாக ஆராய்வதாக சுமந்திரனிடம் உறுதியளித்தார். இது இவ்வாறிருக்க சுவீகரிக்கப்பட்ட காணி களை விடுவிப்பதாகக்கூறி வனஜீவராசி கள் திணைக்களம் அளவீடு செய்ய எடுத்த முயற்சி மக்கள் ஒன்றுகூடியதால் தடுத்து நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பனில் கடந்த திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் வனஜீவராசிகள் திணைக்களம் தம்மால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் எனக் கூறி அதனை விடு விப்பதற்கு என்று தெரிவித்து அந்தக் கிராம மக்களின் வயல் காணிகள், மற்றும் பயிர் செய்கை காணிகளை அளவீடு செய்ய முயற்சித்துக் கொண்டி ருந்தனர்.

இதன் போது அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் பலர் சமுகமளிக்கா ததால் காணிகளை அளக்க முடியாது என தடுத்து நிறுத்தினர். அத்துடன், போதிய முன்னறிவிப்பு வழங்கி பிறி தொரு நாளில் அளவீடு செய்யுமாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தெரிவித்ததை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களம் காணிகளை அளவீடு செய்வதை இடை நிறுத்தி சென்றுள் ளனர்.

## கோட்டா - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பேச்சு

(3ம் பக்கத் தொடர்ச்சி)பண்பாட்டு மையத்தை மெய்நிகர் முறையில் திறந்து வைத்தமையில் தமது வசேட திருப்தியை வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டார். அவர் இலங்கையின் கடற் றொழில் மற்றும் உயிரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தனியாகச் சந்தித்து மீனவர்கள் தொடர்பன பிரச்சனைகள் குறித்தும், அதிகாரப் பகிர்வு குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார் என்று உள்ளது.

## ஜனாதிபதி - தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சந்திப்பு!

(5ம் பக்கத் தொடர்ச்சி) இருக்கின்ற வாய்ப்புக்களை இல்லாமலாக்கி விடக்கூடாது. இந்த விடயங்களின் அடிப்படையில்தான் கூட்டமைப்பு அதன் அரசியல் நகர்வு களை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை, கூட்டமைப்பு அதன் உள்ளூர் வாக்கு வங்கியையும் இழந்துவிடக் கூடாது. ஏற்கனவே, கூட்டமைப்பு தேர்தல் அரங்கில் பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றது. தேர்தல் அரசியலில் பின்னடைவு களை சந்தித்தால்,மக்களை பிரதிநித்துவம் செய்யும் தகுதியையும் இழந்துபோக நேரிடும்.

## அரசியல் தீர்வுக்காக அரசுடன் பேசுவோம் -சம்பந்தர்

(3ம் பக்கத் தொடர்ச்ச்)வடக்கில் அரச திணைக்களங்களாலும் இராணுவத்தாலும் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளைவிடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கோரினோம். பேச்சின் பின்னர் அது தொடர்பில் அரசு நடவடிக்கை களை எடுத்துள்ளது என அறிந்தோம். எனினும், காணிகள் தாமதமின்றி படிப்படி யாக விடுவிக்கப்பட வேண்டும்-என்றார்


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு! தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு தருமா?

ஈழத்தமிழர் அரசியல் விவகாரம் இலங்கைத் தீவுக்குள் தீர்வை எட்டுவதற்காக மீண்டும் ஓர் உரையாடலுக்கு வழி வகுத்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான இலங்கை ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை 25.03.2022 முதல் கட்டத்தை எட்டியுள்ளது.

மிக நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட பேச்சுக்கான வாய்ப்பானது தறபோதே கை கூடியுள்ளதாக இரு தரப்பும் சந்தித்த போது பரிமாற்றியுள்ளனர். தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கலந்து கொண்டதுடன் ஜனாதிபதி பிரதமர் உட்பட வெளிவிவகார அமைச்சர் நீதி அமைச்சருடன் சமல் ராஜபக்ஷவும் அரச தரப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். தமிழர் தரப்பில் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் அது பற்றிய முடிவுகளை அடுத்த இரு மாதங்களில் வழங்குவதாகவும் அதன் பின்பு அடுத்த கட்டப் பேச்சுக்கள் நிகழும் எனவும் தமிழர் தரப்பில் வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.



இக்கட்டுரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னணியையும் அதனூடாக மேற்கொள்ள வேண்டிய உத்திகளையும் தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது பேச்சுக்கள் இராஜதந்திரத்தின் ஒரு செய்முறை என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதிலும் இலங்கை ஆட்சியாளர்களுடன் கடந்த காலத்தில் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகள் அனைத்துமே தந்திரோபாயமாகவே அரச தரப்பால் கையாளப்பட்டதென்ற அனுபவத்தை கொண்டது. அதிலும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவுடன் 11 தடவைக்கு மேல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேசிய போது எந்தவித முடிவுமின்றி ஏமாற்றப்பட்ட அனுபவம் முக்கியமானது.

அத்தகைய ஏமாற்றுத்தனமும் பேச்சுக்கான இழுபறியும் நிகழ்ந்த பின்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு சென்றதற்கான காரணம் முக்கியமானது. அவ்வாறே இந்தியாவின் அழைப்புக்கு பல விளங்கங்களை வெளிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் அதிக உணர்ச்சி வசப்பட்டு மேசையில் அடித்துப் பேசியதாக செய்திகள் வெளியாகியுள்ளது. அது மட்டுமன்றி 13 திருத்தத்தைக் கூட முழுமையாக அமுல்படுத்த முடியாது விட்டால் நாம் எமது வழியில் செல்வோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். பேச்சுகளில் உணர்ச்சிகளை விட தந்திரமும் உத்தியுமே அவசியமானது.

அவரது முதலாவது செயலை விட இரண்டாவது வெளிப்படுத்துகை அதிக கருத்து நிலை சார்ந்தது.

இரண்டாவது பேச்சுக்களுக்கு அரசாங்கம் இணங்கியதற்கு பின்னால் வலுவான சக்திகளின் நடவடிக்கை முதன்மையானதாக அமைந்திருந்தது. அதாவது அமெரிக்க இராஜதந்திரிகளது இலங்கை வருகை மறுபக்கத்தில் இந்தியாவின் நிதி உதவியும் தமிழர் பற்றிய இந்தியாவின் ஜெனீவா வரையான நிலைப்பாடும் முக்கியமானதாகவே தெரிகிறது.

தமிழர் விடயத்தை ஏற்று கொள்ளாது நிராகரிப்பினை அரசாங்கம் பின்பற்றுமாக அமைந்தால் பாரிய நெருக்கடியை இலங்கைத் தீவுக்கு ஏற்படுத்தி விடுமா என்ற குழப்பம் அரசாங்கத்திற்கு உண்டு. இந்தியாவும் அமெரிக்காவும் ஈழத்தமிழருக்கு எதுவும் செய்யாத போது ஏதும் நிகழ்ந்து விடும் என இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அதனால் இன்றைய சூழலை எதிர்கொள்ள வேண்டுமாயின் கூட்டமைப்புடனான பேச்சுக்கள் அவசியமானவையாக உள்ளன.

அதில் நேரடியாக இந்தியாவையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்துவதுடன் புலம் பெயர்ந்தவர்களது முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் பெயரில் அந்த நாடுகளை திருப்திப்படுத்துவதாகவே பேச்சுக்களை அரசாங்கம் திட்டமிடுள்ளது. மேலும் புலம்பெயர் அமைப்புக்களை கையாளவும் இத்தகைய சூழலை பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முயலுவதனைக் காணமுடிகிறது.

காரணம் ஈழத்தமிழரது அரசியல் இருப்பினை பாதுகாப்பவர்களாகவும் தொடர்ந்து முன்னெடுப்பவராகவும் புலம்பெயர்ந்தவர்களே காணப்படுகின்றனர். அதனால் அவர்களை கையாளுவதற்கான நகர்வுகளை ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

மூன்றாவது தமிழ் தரப்பானது காணாமல் போனோர், காணி ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள் பற்றி விடயங்களை உரையாடியதுடன் அதற்கான கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இவை ஒரு ஆரோக்கியமான நகர்வாக அமைந்தாலும் நடைமுறைச்சாத்தியமான நிலையை உறுதிப்படுத்தக் கூடிய தரப்பினை பேச்சுக்களில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும்.

நிச்சயமாக இத்தகைய சூழலில் பொறுப்புக் கூறுவதற்கான தரப்புக்களை பிராந்திய சர்வதேச மட்டத்தில் உள்ள நிறுவனங்களை அழைத்திருக்க வேண்டும். காரணம் இதே போன்று பல பேச்சுக்களும் அதன் பின்பான விளைவுகளையும் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளும் ஈழத்தமிழர்களும் கண்டு கொண்டவர்கள் என்பது நினைவுகூரத் தக்கது.

குறிப்பாக காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு அப்பால் அது பற்றி ஜனாதிபதி எழுப்பிய கேள்விகளே பேச்சுக்களின் எதிர்காலம் எப்படியானதாக அமையும் என்பதை கட்டியம் கூறி நிற்கிறது. அவற்றுக்கு எந்தப்பதிலும் மறுப்பும் வெளிப்படுத்தாத கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களது நிலையே அதிகமான குழப்பத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அதனையும் கடந்த அவ்விடயத்தை அப்படியே ஊடக வெளியில் விமர்சனம் எதுவும் இன்றி உரையாடுவதென்பது அதனையும் விட மோசமானதாகவே ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் கருதுகின்றனர்.

நான்காவது அடுத்த கட்ட பேச்சுக்களின் போது அரசியல் தீர்வு பற்றி உரையாடப் போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அவ்வாறாயின் நிச்சயமாக மூன்றாம் தரப்பின் அவசியப்பாடு தேவையானதாகவே உள்ளது. குறிப்பாக இந்தியாவும் அமெரிக்காவும் தமிழர் விடயத்தில் சில அழுத்தங்களை கொடுப்பவர்களாக இருப்பதனால் அத்தரப்பை கோருவதென்பது அரசாங்கத்திற்கும் தமிழ் தரப்பிற்கும்ஆரோக்கியமானதாக அமையும். இலங்கை ஆட்சியாளரின் நகர்வுகளை ஏற்கனவே புரிந்து கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் அதனை கையாளவும் பேச்சுக்களை நிதானமக நகர்த்தவும் தயாராக வேண்டும். பேச்சுவார்த்தைக்கு பின்னால் அமெரிக்க இந்திய சக்திகளின் நிகழ்ச்சி நிரல் இருப்பதாக எதிர்தரப்புக் கூறுவதனை தமிழ் தரப்பு சாதகமான விடயமாகக் கருத வேண்டும். அதற்கான முனைப்புடன் பேச்சுக்களை தொடரவும் அதற்கான நடவடிக்கைகளை இரு நாட்டின் ஈடுபாட்டுடனும் மேற்கொள்ள முனைவது அவசியமானது.

ஐந்தாவது பேச்சுக்களை தென் இலங்கை ஆட்சியாளர்கள் தந்திரமாக கையாள்வது அவர்களது மரபான அரசியல் நகர்வாகும். இதனால் காலம் தாழ்த்துவது பிற்போடுவது போன்ற இழுத்தடிப்புகளை முதன்மைப்படுத்துவார்கள். அவ்வகை அனுபவங்களே தமிழ் மக்களது அரசியலில் கடந்த காலம் முழுவதும் காணக் கூடிய விடயமாக அமைந்திருந்தது. இதனால் தமிழ் தரப்பு பேச்சுவார்த்தைக் காலத்தை தெளிவாக வரையறுத்துக் கொள்வது அதற்கான அட்டவணையை வரையறுப்பது என்பன உடனடி அவசியமான விடயங்களாக கொள்ளப்படுதல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் பேச்சுக்கள் நிறைவு பெறவும் அதில் அரசியல் தீர்வின் முடிவையும் கவனத்தில் கொள்வது அவசியமானது.

**கட்டுரையாளர்:**
**பேராசிரியர்**
**- K.T.கணேசலிங்கம் -**

ஆறாவது அரசியல் தீர்வு விடயத்தில் தமிழரசுக் கட்சியினதும் ஏனைய புதிய பழைய தேசிய அணிகளின் கோரிக்கைகளும் பிரகடனங்களுமாக சமஷ்டி காணப்படுகிறது. அதன் வளர்ச்சிக் கட்டங்கள் அதிகமாக உலகளாவிய அனுபவங்களாக உள்ளன. அவற்றை முன்வைப்பதுவும் அது பற்றிய உரையாடலை மேலெழச் செய்வதும் தற்போதைய தேவையாக உள்ளது. குறைந்த பட்சம் இன்றை சூழலைப் பயன்படுத்திக் கொண்டு உச்சளவான கோரிக்கையை முன்வைப்பது அவசியமான உரையாடலாக உள்ளது. பிராந்திய சர்வதேச சக்திகளது நகர்வை கவனத்தில் கொள்ள வேண்டும். உக்ரையின் போர் நிமித்தம் ரஷ்சிய இந்திய நெருக்கம் அதில் சீனாவின் புரிதல் என்பன குவாட் கட்டமைப்பினை பலவீனப்படுத்தியுள்ளது. அதனை சரி செய்ய வேண்டிய சூழலுக்குள் அமெரிக்காவும் குவாட் நாடுகளும் காணப்படுகின்றன. அத்தகைய சூழலையும் தமிழ் தரப்பு கவனம் கொள்வது அவசியமானது.

அதே நேரம் இலங்கைத் தீவின் பொருளாததார நெருக்கடி மறுபக்கத்தில் அரசியல் நெருக்கடி இரண்டுமே இலங்கை ஆட்சியாளர்களை பாதித்துள்ளது. எனவே இச்சூழல் தமிழருக்கான வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. அதனை தமிழ் தரப்பே கவனம் கொள்ள வேண்டும். ஏனைய தரப்புக்கள் தமது நலனுக்கு உட்பட்டே செயல்படுத்துவன. அதனால் அதிக முக்கியத்துவம் உள்ள காலப்பகுதியாகவே தமிழரது அரசியல் உள்ளது.

ஏழாவது வடக்குக் கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான நிதியம் தொடர்பிலான உத்தரவாதத்தை சர்வதேச மட்டத்தழிலான நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்க வேண்டும். அமெரிக்காவின் வற்புறுத்திலில் பேச்சுக்களை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளதை தமிழ் தரப்புப் புரிந்து கொண்டு அமெரிக்காவினதும் சர்வதேச நிறுவனங்களதும் ஒத்துழைப்பினை நாடுதல் வேண்டும். அவற்றின் அனுசரணையுடன்
(21ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 மார்ச் 2022 முதல் 01 ஏப்ரல் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 04 ஏப்ரல் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### Mrs Ithaya Francis

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் யாழ்உடுவிலை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Mrs Ithaya Francis அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 28 மார்ச் 2022 திங்கட் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். Mrs Ithaya Francis அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஞானதேவி நடராஜா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானதேவி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 27 மார்ச் 2022 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஞானதேவி நடராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45ம் நாள் நினைவஞ்சலி



### திரு சசிகரன் தவராஜா

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உணாப்பிளவு முல்லைத்தீவை வதிவிடமாகவும் இங்கிலாந்தை கொண்டிருந்த திரு சசிகரன் தவராஜா அவர்களது 45ம் நாள் நினைவு நாள் 30 மார்ச் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். சசிகரன் தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய நான்காவது ஆண்டு நினைவு நாள் 01 ஏப்ரல் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 மார்ச் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 06 ஏப்ரல் 2022 புதன் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




26 மார்ச் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




27 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானதேவி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 மார்ச் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனியின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி ஜெனனி தனது பெற்றோர்களுடனும் அண்ணா கார்த்திக் உடனும் இணைந்து 27 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 மார்ச் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி அசோக்குமார் வனிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அனிஷ் அசோக்குமாரின் 9வது பிறந்த நன் நாளும் செல்வன் அபிலேஷ் அசோக்குமாரின் 12வது பிறந்த நன்நாளும் ஆகும். அன்றைய தினம் சகோதர்கள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




28 மார்ச் 2022 திங்கட்கிழமை கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Mrs Ithaya Francis அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 மார்ச் 2022 திங்கட்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை திருசின்னையா இராஜேந்திரம் திருமதி இராஜேந்திரம் திரேசம்மா திரு இராஜேந்திரம் யேசுதாசன் திரு இராஜேந்திரம் தேவதாசன் திருமதி தேவதாசன் லூர்தமேரி ஆகியோரது நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 மார்ச் 2022 புதன்கிழமை அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உணாப்பிளவு முல்லைத்தீவை வதிவிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சசிகரன் தவராஜா அவர்களது 45ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 மார்ச் 2022 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு கதிரவேலு கதிரித்தம்பி

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கதிரவேலு கதிரித்தம்பி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 02 ஏப்ரல் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கதிர வேலு கதிரித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள்.




30 மார்ச் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி அனிருத்தன் சுயானி தம்பதிகளின் மூன்றாவது திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




27 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு காசிநாதன் வீரகத்திப்பிள்ளை அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 31 மார்ச் 2022 வியாழக்கிழமை திரு காசிநாதன் வீரகத்திப்பிள்ளை அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




25 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சந்திரிகா ரஞ்சன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சந்திரிகா ரஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடண் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




01 ஏப்ரல் 2022 வெள்ளிக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களது நான்காவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

## உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com




**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

**Gayatiri Thavan**

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

**Insurance can seems confusing**
**It doesn't have to be.**

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம்
அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால்
பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
Life | Health | Auto | Home | Travel | Wealth

அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2022





மாரிதேவி தியானம்
அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அநல நயண யுக்மம் ஹரகேயூர பூஷ்யம்
அகில புவன மாதா மாரிகாதேவி ஸ்வரூபம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பிலவ வருஷம் பங்குனித்திங்கள் 20ம் நாள் (02.04.2022) சனிக்கிகிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவினி நட்சதிரமும் துதியை திதியும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். அடியவர்கள் உற்சவ காலங்களில் ஆலயம் வந்து அம்பிகையை தரிசித்தல் உத்தமோத்தம புண்ணியமாகும்.

| | |
|---|---|
| 01-04-2022 வெள்ளி | வருடாந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பம். விக்னேஸ்வர, மூலமூர்த்தி, உற்சவமூர்த்தி, அஸ்திரதேவி, சிம்ம, அனுக்ஞைகள், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் |
| 02-04-2022 சனி | காலை விசேட புண்ணியாக வாசனம், ரக்ஷாபந்தனம், பேரிதாடனம், வசந்தமண்டபப்பூசை, அஸ்திரதேவியோடு துவஜபட வீதி பிரதக்ஷணம், மூல சிம்ம பூசை, தம்ப பிரதிஸ்டை, துவஜபட அபிசேகம், சமஸ்தா தேவி ஆவாகனம். யாத்ரா தானம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), கணபதி தாளம், சிம்ம தாளம், அஸ்திரதேவி ஆவாகனம், பலிபீட பிரதிஸ்டை, மகாசீர்வாதம், வீதி பிரதக்ஷணம், நவசந்தியாவாகனம், இரவு: யாகாரம்பம் |
| 16-04-2022 சனி | காலை: யாகாங்குர விஜர்ஜனம், ஆர்ணோற்சவம், விசேட தீர்த்த தொட்டியில் அஸ்திரதேவி ரக்ஷாபந்தன விஜர்ஜனம், தீர்த்த ஸ்நானம் முடித்து மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், இரவு: துவஜவரோகணம் (கொடியிறக்கம்), நவசந்தி விஜர்ஜனம், மௌனோற்சவம், மௌனோற்சவம், ரக்ஷாபந்தன விஜர்ஜனம், சண்டேஸ்வறி உற்சவம், ஆசாறிய உற்சவம், குரு வழிபாடு. |

| நாள் | உற்சவம் | பகல் உபயகாரர் | இரவு உபயகாரர் |
|---|---|---|---|
| 02-04-2022 (சனி) | 1ம் திருவிழா | கொடியேற்றம் காலை 10:00 மணி, ராஜ்குமார் குடும்பம், உதயகுமார் குடும்பம், ஹரீந்திரன் குடும்பம், பாலகிருஷ்ணன் குடும்பம் | சிவமயம் குடும்பம், சுகுணரூபன் குடும்பம் மாணிக்கம் சௌந்திரமேனன் குடும்பம் |
| 03-04-2022 (ஞாயிறு) | 2ம் திருவிழா | பிறேம்குமார் இளங்கோ குடும்பம் | ஐய்யான்துரை குடும்பம் |
| 04-04-2022 (திங்கள்) | 3ம் திருவிழா | சந்திரலிங்கம், தமிழ்செல்வி குடும்பம் | விஜயகுமாரன் சுவர்ணா குடும்பம் |
| 05-04-2022 (செவ்வாய்) | 4ம் திருவிழா | ஆனந்தகுமார் ஆனந்தவேல் குடும்பம், பிரணவன் பாலகுமார் குடும்பம், கண்ணன் வெங்கடாசலம் குடும்பம் | அருள் சந்திரன் குடும்பம் |
| 06-04-2022 (புதன்) | 5ம் திருவிழா | ஈஸ்வரபாதம் சின்னமாமயில் குடும்பம் | குணசேகரம் குடும்பம், தனசேகரம் குடும்பம், ஜெயசேகரம் குடும்பம், |
| 07-04-2022 (வியாழன்) | 6ம் திருவிழா | மோகனதாஸ் சுதன் சாந்தி குடும்பம் | நாராயணசாமி பவாமலர் குடும்பம் (பாண்டிக்கம்பனி) |
| 08-04-2022 (வெள்ளி) | 7ம் திருவிழா | விசாகரட்ணம் ராஜசேகரம், லீலாவதி, தமயந்தன், சிந்துஜா குடும்பம், தமோதரம்பிள்ளை, முரளீதரன், பகீரதன் குடும்பம் | சிவநேசன் தங்கேஸ்வரி குடும்பம் |
| 09-04-2022 (சனி) | 8ம் திருவிழா | சகாதேவன்(அண்ணாச்சி), சந்திரவதனா குடும்பம் | (வேட்டைத்திருவிழா) மோகனதாஸ் தங்கராணி குடும்பம், சேகர் சுஜாதா குடும்பம், சுது கிரேக் குடும்பம் |
| 10-04-2022 (ஞாயிறு) | 9ம் திருவிழா | தேவசிகாமணி தங்கமலர் குடும்பம் ( தேவக்கிளி குடும்பம் ) | திசோக் குடும்பம், ஜீவன் குடும்பம், நந்தன் குடும்பம், ஜனா குடும்பம், ஜெயம் குடும்பம் |
| 11-04-2022 (திங்கள்) | 10ம் திருவிழா | முரளி கௌரி குடும்பம், ஜலந்திரன் பவானி குடும்பம் | பாலகுருசாமி பாலச்சந்திரன் குடும்பம் |
| 12-04-2022 (செவ்வாய்) | 11ம் திருவிழா | (பூங்காவனம்) இளைஞர்கள் | (பூங்காவனம் இரவு)இளைஞர்கள் |
| 13-04-2022 (புதன்) | 12ம் திருவிழா | இரா தனபாலன் குடும்பம் | புலிவேட்டை சுரேஷ் குடும்பம், நிஷாந்தன் குடும்பம் |
| 14-04-2022 (வியாழன்) | 13ம் திருவிழா | கண்ணன் சங்கீதா குடும்பம் | சப்பறம் சி. இளையபெருமாள் குடும்பம் |
| 15-04-2022 (வெள்ளி) | 14ம் திருவிழா | தேர் வ.இ.ரு. சந்திரலிங்கம் சீலாவதி குடும்பம் | கந்தசாமி அண்ணமலை குடும்பம் |
| 16-04-2022 (சனி) | 15ம் திருவிழா | தீர்த்தம் வாசுகி ஜீவதாஸ் குடும்பம் | கொடியிறக்கம் சுகந்தன் கவிதா குடும்பம் |
| 22-04-2022 (வெள்ளி) | குளிர்த்தி | குளிர்த்தி அபிசேகம் பொன். சிவகுமார் சந்தானலக்ஸ்மி குடும்பம் | கற்பூரத் திருவிழா அசோக்குமார் கலாஜினி குடும்பம் |
| 24-04-2022 (ஞாயிறு) | இரவு | வைரவர் மடை – பிரணவி மயில்வாகனம் குடும்பம் | |

| | | |
|---|---|---|
| அபிசேகம் | பகல் 9:00 மணி | இரவு 6:00 மணி |
| மூலஸ்தான பூசை | பகல் 9:30 மணி | இரவு 6:30 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11:00 மணி | இரவு 8:00 மணி |

ஆலய பிரதம குரு: ஆகம கிரியா வியுதர் சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்

மங்காள வாத்தியம்: சிவா நாதஸ்வர மியுசிக் அக்கடமி, சிவமயம் குழுவினர்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

**16-04-2022 சனிக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று காலை 6 மணி முதல் பிதிர் தர்ப்பணம் செய்யப்படும்**

www.shrimuththumaari.com Canada-Shri-Muththumaari-Amman

இவ்வண்ணம்: ஆலய தர்மகத்தா சபையினர்

# ஜனாதிபதி கோட்டபாயாவின் சர்வ கட்சி மாநாடு ஒரு நாடகமா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



சர்வகட்சி மாநாடு எனப்படுவது வளர்ச்சியடைந்த ஜனநாயகங்களில் ஒரு உன்னதமான பயில்வு. முழு நாடும் கட்சி பேதங்களைக் கடந்து தேசியப் பிரக்ஞையோடு ஒன்றிணைந்து முடிவை எடுக்கும் நோக்கத்தோடு சர்வகட்சி மாநாடு கூட்டப்படுவதுண்டு. ஆளுங்கட்சி எதிர்க்கட்சி சிறிய கட்சி ,பெரிய கட்சி என்ற பேதமின்றி நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் இணைந்து ஒரு பொது முடிவை எட்டுவதற்கான ஒரு மகத்தான ஜனநாயக நடைமுறை தான் சர்வகட்சி மாநாடு ஆகும்.

ஆனால் இலங்கைத்தீவில் சர்வகட்சி மாநாடு எனப்படுவது அவ்வாறான உன்னதமான ஒரு பயிலுகை அல்ல. இலங்கைத்தீவின் மோசமான அரசியல் கலாச்சாரத்தை பொறுத்தவரை சர்வ கட்சி மாநாடு எனப்படுவது ஒரு தப்பிச் செல்லும் வழி, அல்லது அரசாங்கம் தனது தோல்விக்கு எதிர்க் கட்சிகளையும் கூட்டுப் பங்காளிகள் ஆக்கும் அல்லது கூட்டுப் பொறுப்பாக்கும் ஒரு தந்திரம் அல்லது காலத்தை கடத்தும் ஓர் உத்தி. அதாவது எதிர்க்கட்சிகளின் கவனத்தை திசை திருப்பி காலத்தை கடத்தும் ஓர் உத்தி எனலாம்.

குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து கடந்த பல தசாப்தங்களாக வட்டமேசை மாநாட்டில் இருந்து தொடங்கி இன்று வரையிலான எல்லா சர்வகட்சி மாநாடுகளையும் தொகுத்துப் பார்த்தால் அவை அனைத்தும் தந்திரமான உள்நோக்கம் கொண்டவை என்பது தெரிய வரும். இலங்கை அரசாங்கம் நியமித்த விசாரணைக் கொமிஷன்கள் போலவே சர்வகட்சி மாநாடுகளும் தீர்க்க விரும்பாத ஒரு பிரச்சினைக்காக கூட்டப்படும் மாநாடுகள் தான்.

தமிழ் அரசியலில் முதலில் வட்டமேசை மாநாடு என்ற வார்த்தையை பயன்படுத்தியது ஜி. ஜி. பொன்னம்பலம் என்று கூறப்படுகிறது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் எல்லா கட்சிகளும் ஒரு வட்ட மேசையில் அமர்ந்து பேச வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அப்பொழுது அவருடைய அரசியல் எதிரிகளாக காணப்பட்ட தமிழரசுக் கட்சி அப்படி என்றால் சதுரமேசை மாநாட்டைக் கூட்டலாம் என்று அவரை கிண்டல் செய்தார்கள். ஆனால் வட்டமேசை மாநாடுகள், அல்லது சதுர மேசை மாநாடுகள், நல்லது சர்வ கட்சி மாநாடுகள் போன்றன தமிழ் மக்களைப் பொறுத்தவரை தோல்வியுற்ற அரசியல் நடைமுறைகள் தான்.

இவ்வாறான தோல்விகரமானதொரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்தே கடந்த வாரம் 23 மார்ச் 2022 நடந்த சர்வகட்சி மாநாட்டையும் பார்க்க வேண்டும். நடந்த கூட்டமைப்புடனான சந்திப்பும் அத்தகையதா?

நாட்டை இப்பொழுது ஆள்வது மூன்றிலிரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையை வென்றெடுத்ததாக மார்தட்டிக் கொள்ளும் ஓர் அரசாங்கம் ஆகும். நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்தும் விதத்தில் 20வது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து அதன் மூலம் ஓர் அரசனுக்கு இருப்பதைப் போன்ற அதிகாரங்களை ஜனாதிபதி பெற்றுக் கொண்டார்.

ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நிறைவேற்று அதிகாரமும் அவரை வெற்றி பெற்ற ஒரு நிர்வாகியாக நிரூபிக்க தவறி விட்டன. யுத்தமும் பொருளாதார நெருக்கடியும் ஒன்றல்ல என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்ததாக கூறப்படும் சிங்கள மக்கள் இப்பொழுது "கோட்டா வீட்டுக்குப் போ" என்று கேட்கும் ஒரு நிலைமை.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டை கூட்டி இருக்கிறது. சர்வகட்சி மாநாடு எனப்படுவது ஜனாதிபதியைப் பொறுத்தவரை கீழிறங்கி வருவதுதான். ஆனால் அவர் இதய சுத்தியோடு இறங்கி வருகிறாரா என்பது தான் இங்குள்ள கேள்வியாகும். அல்லது அவர் தனது தோல்வியை எல்லா கட்சிகளுக்கும் உரியதாக மாற்றப் பார்க்கிறாரா என்றும் கேட்கலாம்.



தமிழ் கட்சிகளில் தமிழரசுக்கட்சியும் பிள்ளையானின் கட்சியும் ஈபிடிபியும் புளட்டும் மட்டும் அதில் பங்குபற்றின. ஏனைய கட்சிகள் பங்குபற்றவில்லை. தென்னிலங்கை மையக் கட்சிகளில் மிகச்சில கட்சிகள்தான் பங்குபற்றின.

அந்த மாநாடு ரணிலின் மதிப்பை மேலும் உயர்த்தியிருக்கிறது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ போன்றோரை ரணில் புத்திசாலித்தனமாக அம்பலப்படுத்தியிருக்கிறார். ஜனாதிபதி பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும் அளவுக்கு ரணில் தனது ஆளுமையை காட்டியிருக்கிறார்.

ரணில் ஒரே நேரத்தில் இரண்டு தரப்புக்கு தனது ஆளுமையை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று அரசாங்கத்துக்கு. மற்றது சாஜித்துக்கு. அப்படித் தான் சஜித்தும் அவரும் தனது பலத்தை ஒரே நேரத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவும் காட்ட வேண்டி இருக்கிறது.

அதேசமயம் ரணிலுக்கு எதிராகவும் காட்ட வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் இல்லை. சில மாதங்களுக்கு முன் மனோ கணேசன் கூறியது போல அரசாங்கம் எப்பொழுதோ தோற்று விட்டது. ஆனால் அந்த தோல்வியை தங்களுடையதாக சுவீகரித்துக் கொள்ளத் தேவையான ஐக்கியம் எதிர்க் கட்சிகள் மத்தியில் கிடையாது.

சர்வகட்சி மாநாடு ரணிலின் ஆளுமையை நிரூபித்திருக்கலாம். ஆனால் அதற்காக அவரை அங்கீகரிக்க அரசாங்கம் தயாரா? அல்லது சஜித்தும் எதிர்க்கட்சிகளும் தயாரா? என்று பார்க்க வேண்டும்.

மூத்த அரசறிவியலாளரான மு.திருநாவுக்கரசு கூறுவது போல மேற்கத்திய நாடுகளில் இவ்வாறான நெருக்கடிகள் வரும் பொழுது எல்லாக் கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும்.

அப்போது தான் நாட்டின் முழுப் பலத்தையும் ஒன்றுதிரட்டி நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். ஆனால் இலங்கைதீவில் அவ்வாறான செழிப்பான ஒரு பாரம்பரியம் இல்லை. ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கினால் இப்போதிருக்கும் நெருக்கடிகளை தற்காலிகமாக சமாளிக்கலாம்.ஆனால் அவ்வாறு ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு சிங்கள கட்சிகள் தயாரா ?

ஏனெனில் அது எந்த தேசிய அரசாங்கம் என்பதே இங்குள்ள அடிப்படைக் கேள்வியாகும். அது சிங்கள பௌத்த பெருந்தேசிய அரசாங்கமா ? அல்லது இலங்கைத் தீவின் பல்லித்தன்மையை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் ஒரு தேசிய அரசாங்கமா என்பது தான் இங்குள்ள பிரச்சினை.

தன்னைத் தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவராக பிரகடனப்படுத்தும் ஒரு ஜனாதிபதி அவ்வாறு பல்லினத்தன்மைமிக்க ஒரு தேசிய அரசாங்கத்தை எப்படி உருவாக்குவார்? அவ்வாறு மூன்று இனங்களில் தேசிய இருப்பையும் நிராகரித்த காரணத்தால்தான் அவர் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறுகிறார்.அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக கூறுகிறார் இப்போதிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம் covid — 19 தான் என்று.

ஆனால் இனப்பிரச்சினைதான் பொருளாதார பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம். நாட்டின் முதலீட்டுக் கவர்ச்சியை அது அழித்து விட்டது. 2009க்குப் பின்னரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அதனால் நாடு அதன் முதலீட்டு கவர்ச்சியை கட்டியெழுப்ப முடியவில்லை. இவ்வாறு இனப்பிரச்சினை காரணமாக ஏற்கனவே நொந்து போயிருந்த பொருளாதாரத்தின் மீது ஈஸ்டர் குண்டுவெடிப்பு மற்றொரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அடுத்த அதிர்ச்சியை பெருந்தொற்று நோய் கொடுத்தது. அதாவது இனப்போர் காரணமாக ஏற்கனவே சரிந்து போயிருந்த பொருளாதாரத்தின் மீது ஈஸ்டர் குண்டு வெடிப்பும் covid — 19உம் கோட்டாபய அரசாங்கத்தின் திறமையற்ற நிர்வாகமும் மேலும் அதிர்ச்சிகளை ஏற்படுத்தின என்பதே சரி.

எனவே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பது என்பது அதன் மூலப் பிரச்சினையில் இருந்தே தொடங்க வேண்டும். உடனடிக்கு வேண்டுமென்றால் சரிந்து விழும் வாழைக்கு முட்டுக் கொடுப்பது போல எதையாவது செய்யலாம். அதைத் தான் இப்போது செய்ய எத்தனிக்கிறார்கள். ஆனால் நிரந்தரத் தீர்வு வேண்டுமானால் பல்லினத்தன்மை மிக்க ஒரு தீவைக் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

அண்மையில் உலகின் மிகவும் சந்தோஷமான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் பின்லாந்து மீண்டும் முதல் இடத்தை பெற்றிருக்கிறது. படைத்துறை ரீதியாக வளம் குறைந்த பின்லாந்து ரஷ்யப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் வாழ்கிறது. கடந்த நூற்றாண்டிலிருந்து பேரரசுகளுக்கிடையிலான போட்டிக்குள் அது எப்பொழுதும் கெட்டித்தனம்டினமாகவும் கவனமாகவும் முடிவுகளை எடுத்தது வருகிறது.

உக்ரைனைப் போலவோ அல்லது ஜோர்ஜியாவைப் போலவோ பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் பக்கம் சாயாமல் நிதானமாக முடிவுகளை எடுத்தது. தமது நாடு பேரரசுகளின் உதைபந்தாட்டக் களமாக மாறக் கூடாது என்று சிந்தித்து பின்லாந்து மக்கள் பொருத்தமான முடிவுகளை எடுத்தார்கள்.

உலகின் மிகச்சிறந்த கல்வி முறையைக் கொண்ட நாடாக பின்லாந்து கணிக்கப்படுகிறது. அதை அந்நாடு தனது வெளியுறவுக் கொள்கையில் அழகாக தீர்க்கதரிசனமாக பிரதிபலிக்கிறது. இலங்கையும் இலவசக் கல்விக்கு பெயர் பெற்றது. ஆனால் இலங்கைத்தீவின் இலவச கல்வியானது இனப்பிரச்சினையைத் தீர்க்க தவறி விட்டது.

இலங்கைத்தீவின் இலவசக் கல்வியானது ஒருபுறம் வறிய மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளால் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்புக்களை வழங்கியது.

அதேசமயம் அது இனப்படுகொலையை தீர்க்க தவறியிருக்கிறது. இப்போதிருக்கும் அரசாங்கம் வியத்மக எனப்படும் தொழில்சார் திறன் மிக்க நிபுணர்களைக் கொண்ட ஒரு சிந்தனைக் குழாத்தால் வழி நடத்தப்படுவது என்று கருதப்படுகிறது.

இப்போதிருக்கும் மத்திய வங்கியின் ஆளுநர் அந்த சிந்தனைக் குழாத்தில் இருந்து வந்தவர் தான். ஆனால் இந்த புத்திசாலிகள் எல்லாம் நாட்டை எங்கே கொண்டு போய் விட்டிருக்கிறார்கள்?

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாக வாசிக்கலாம்.

# திக்குத் தெரியாமல் தவிக்கும் அ.தி.மு.க

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -



ஜனநாயக முறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் தலைமையிலான அரசிற்கு அதன் ஆட்சி அதிகாரத்தை செழுமையான முறையில் வழி நடத்திட வலிமையான எதிர்க் கட்சி தேவை என்றும் அதுவே மக்களாட்சியின் சிறப்பம்சம் என்றும் அரசியல் நிபுணர்கள் குறிப்பிடுவார்கள்.

கடந்த காலங்களில் அ.தி.மு.க. ஆட்சி செய்தபோது தி.மு.க. வலிமையான எதிர்கட்சியாக செயற்பட்டது. ஆனால் தற்போது தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. கட்சி ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கின்ற நிலையில் அக்கட்சி திசைமாறி பயணித்தால் அதனை தட்டிக்கேட்டு மக்கள் நலன் பாதையில் பயணிக்க வைப்பதற்கான போராட்டக் குணம் கொண்ட அரசியல் சக்தியாக அ.தி. மு.க. இருக்கின்றதா என்பதில் ஐயப்பாடுகள் அதிகமுண்டு.

தி.மு.க. பொறுப்பேற்று இந்தப் பத்து மாத காலகட்டத்தில் அ.தி.மு.க.வின் சட்டசபை செயற்பாடுகள் வழமையான எதிர்கட்சியைப் போன்றே உள்ளதோடு ஆரோக்கியமான அரசியலை முன்னெடுக்காமல் தொடர்ந்து வெளிநடப்பு அரசியலைத் தான் பின் பற்றி வருகிறது. உள்ளாட்சித் தேர்தலில் பாரிய தோல்வி பா.ஜ.க.வுடன் ஒருமித்த கொள்கை ரீதியிலான கூட்டணியாக செயற்படாமல் தேர்தல் உடன்பாடு என்ற அளவில் செயல்படும் போக்கு காணப்படல் இரட்டைத் தலைமைக்கும் கட்சித் தொண்டர்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் இடைவெளியை குறைக்க முயற்சி எடுக்காதிருத்தல் இரட்டைத் தலைமை பெரிதா? அல்லது மாவட்ட செயலாளர்களின் ஆதிக்கம் முதன்மையானதா? என்ற நிலை தோற்றம் பெற்றிருந்தல் சசிகலாவை சந்திப்பவர்களைத் தொடர்ந்து கட்சியிலிருந்து நீக்குதல், சசிகலாவைத் தொடர்ந்து தனிமைப்படுத்தும் போக்கை கடைபிடித்தல் சசிகலாவை ஓ பன்னீர்செல்வம் பகடைக்காயாக முன்னிறுத்தும் உத்திக்கு எதிராக எடப்பாடியும் அவரது ஆதரவாளர்களும் எந்தவொரு நடவடிக்கையும் மேற் கொள்ளாதிருத்தல் பா.ஜ.க. தலைமையுடனான உறவை வலுப்படுத்திக் கொள்ளாமலும் முழுமையாக துண்டித்துக் கொள்ளாமலும் தொடர்ந்து செயல்படுதல், என்று அ.தி.மு.க. தற்போது திக்கு தெரியாமல் பயணிக்கும் கப்பல் போலாகி விட்டது.

இந்நிலையில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் நீதியரசர் ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையகம் அமைக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு பிறகு உச்ச நீதிமன்ற உத்தரவிற்கு பிறகு அந்த ஆணையகம் மீண்டும் விசாரணையைத் தொடங்கியிருக்கிறது.

இதில் முன்னாள் முதல்வரும் துணை முதல்வருமான பன்னீர்செல்வம் ஆஜராகி வாக்கு மூலம் அளித்திருக்கிறார். அவர் தர்மயுத்தம் நடத்தியதன் பின்னணியை தர்மசங்கடத்துடன் எதிர்கொண்டிருப்பதாக ஒரு பிரிவினரும் அவர் பேசியிருக்கும் விடயங்கள் அனைத்திலும் முன்னாள் அமைச்சர்கள், தலைமை செயலாளர் மற்றும் சசிகலா ஆகியோர் குறித்து அமைந்துள்ளதாக பிறிதொரு பிரிவினரும் கூறுகின்றனர்.

இதனால் அடுத்து வரும் காலத்தில் அ.தி.மு.க.வில் வெடிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. எடப்பாடி தற்போது சசிகலா விடயத்தில் மேற்கொண்டிருக்கும் நிலைப்பாட்டை பன்னீர்செல்வம் விடயத்திலும் பின்பற்றக்கூடிய நிலை ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால் பன்னீர்செல்வம் அரசியல் அனுபவமும், தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வை கையாளத் தெரிந்த தலைவர் என்பதால் அவருடைய அரசியல் நகர்வுகளுக்கும் அரசியல் நடவடிக் கைகளுக்கும் எந்தவொரு இடையூறும் ஏற்படாது என்று நம்பப் படுகின்றது.

இதனிடையே ஜெயலலிதாவின் மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட பல விவகாரம் குறித்த வினாவிற்கு ‘தெரியாது“ என்று பதிலளித்திருக்கிறார் பன்னீர் செல்வம். இந்நிலையில் ஏன் ஜெயலலிதாவின் மரணம் குறித்து ஆணையகம் அமைக்க வேண்டும்? என்று கேட்டீர் என்ற வினாவிற்கும் அவரிடம் தெளிவான பதிலில்லை என்பதால் விசாரணை ஆணையகத்தை அவருடைய அரசியலுக்காகத் தான் அவர் பயன் படுத்துகிறார் என்பது தெளிவாக தெரிய வருகிறது.

தற்போது தமிழகம் முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் மின்வாரிய பணிகளுக்கான ஒப்பந்தத்தை குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்கு தமிழக அரசு வழங்கியிருப்பதன் பின்னணியில் முறைகேடுகள் நடந்திருப்பதாக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி இருக்கிறார். ஆனால் இது தொடர்பாக அமைச்சர் செந்தில் பாலாஜி தெளிவான விளக்கத்தை அளித்த பிறகும் பா.ஜ.க. திட்டமிட்டு அவ் விடயத்தினை அரசியலாக்க முனைகின்றது. குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்கு தங்களது ஆட்சி காலத்தில் ஒப்பந்தத்தை வழங்கிய அ.தி. மு.க. தொடர்ந்து மௌனம் சாதித்து வருவது ஏனைய அரசியல் கட்சிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இது அ.தி.மு.க.வின் பலவீனத்தை அம்பலப்படுத்துவதாகவும் உள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மைத் துறைக்கான வரவு, செலவுத் திட்டம் ஆகிய இரண்டில், வேளாண்மை வரவு, செலவுத்திட்டத்துக்கு மக்களிடம் ஆதரவும், வரவேற்பும் அதிகரித்திருக்கிறது. இதில் ஏராளமான கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தாலும் அவை தொடர் பான திட்ட வரைவுகள், முறையாக செயல்படுத்தப்பட்டால் விவசாயிகள் ஓரளவு தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வார்கள். இருப்பினும் ஆளுநர் மூலம் தமிழக அரசுக்கு மத்திய அரசு தொடர்ந்து நெருக்கடிகளை அளித்து வருகிறது. தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை அண்மையில் ஆளுநரை சந்தித்து தமிழக அரசு குறித்த மனுவொன்றை அளித்திருக்கிறார்.

ஆனால் அதன் பின்னர் ஆளுநரை சந்தித்த தமிழக முதல்வர், “நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு கோரும் தீர்மானத்தை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று“ வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. இதுவொரு வகையான அரசியல் உத்தி என்றும் இதனை தி.மு.க. தொடர்ந்து மேற் கொண்டு வருவதன் மூலம் பா.ஜ.க.வை சட்டரீதியாகவும் திராவிட கோட்பாட்டியல் தத்துவத்தின் அடிப்படையிலும் எதிர்கொள்வதாக இருக்கின்றது. இதனிடையே தி.மு.க.விற்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே உள்ளாட்சி தேர்தல் இடவொதுக்கீடு தொடர்பாக முறுகலான மனநிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு உடனடியாக தீர்வு காணாவிட்டால் கூட்டணிக்கட்சியினரிடையே விரிசல் போக்கு ஏற்படுவதுடன் ஏனைய மாநிலங்களில் பா.ஜ.க.வின் கையாண்டு வெற்றி பெற்ற சித்து விளையாட்டு தமிழகத்திலும் நிகழ்த்த வாய்ப்பு ஏற்பட்டு விடக் கூடும் என்ற அச்சமும் உருவாகியிருக்கிறது.

மக்களிடையே அ.தி.மு.க.விற்கு இருக்கும் செல்வாக்கு சரியவும் அ.தி.மு.க.வின் நிரந்தர வாக்கு வங்கியாக திகழும் பெண்மணிகள் தி.மு.க.வின் விசேட சலுகை அறிவிப்புக்களால் அக் கட்சி நோக்கி நகரத் தொடங்கியிருக்கின்றார்கள். இதனை உணர்ந்து அ.தி. மு.க.வின் இரட்டை தலைமை ஏதேனும் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்றால் தற்போது தெளிவான இலக்கை நிர்ணயிக்காமல் பயணிக்கும் அ.தி.மு.க.விற்கு மக்களின் ஆதரவும் கிடைக்காமல் போகக்கூடும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
ஒரு மேடையில் இரு நிகழ்வுகள்
ஈழத்து - தமிழக இசை வேந்தர்கள்!
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022 மாலை 5.00 மணி



# வேகமாக மாறி வரும் உலக அரசியல் சூழல்?

ரஷ்யா — உக்ரைன் யுத்தம் எப்போது முடிவுக்கு வரும்? இந்தக் கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை. பேச்சு வார்த்தை முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்திருக்கின்றன. நேட்டோ உறுப்பு நாடுகள் தொடர்ந்தும் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி வரும் நிலையில் ரஷ்யாவும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றது. ஒன்றில் ரஷ்யா தோல்வியடைய வேண்டும் அல்லது உக்ரைன் முழுமையாக வீழ்ச்சியடைய வேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று இடம் பெறாத வரையில் இந்த யுத்தம் முடிவுக்கு வரப் போவதில்லை என்னும் நிலைமையே தற்போது காணப்படுகிறது. ரஷ்யா தோல்வியடைவது என்னும் பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில் ரஷ்யா ஒரு அணுவாயுத நாடு. ரஷ்யாவிற்கு எதிராக நேட்டோ நாடுகள் களமிறங்கினால் நிச்சயம் ஒரு உலக யுத்தம் ஏற்படும். சர்வதேச அரசியல் நிபுணர்கள் பலரும் நிலைமைகள் தொடர்பில் எச்சரிக்கின்றனர்.

ரஷ்ய வெளிவிவகார நிபுணர்களில் ஒருவரான (Dr.Andrey Kortunov) அன்றியோ குர்டனோவ் அண்மையில் மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்திற்காக நேர்காணல் செய்திருந்தேன். நாங்கள் அணுவாயுத யுத்தமொன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அவர் குறிப்பிடுகிள்றார்.

இன்றைய நெருக்கடி 60 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவிற்கும் மேற்கலகிற்கும் இடையில் நிலவிய அணுவாயுத பதற்றத்தை விடவும் சிக்கலானது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் ஐரோப்பா எதிர் கொண்டிருக்கும் பாரதூரமான நெருக்கடி இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ரஷ்யாவின் முன்னணி வெளிவிவகார சிந்தனையாளர்களில் ஒருவரான (Dr.Andrey Kortunov) அன்றியோ குர்டனோவ் தற்போது (Director General of the Russian International Affairs Council) ரஷ்ய வெளிவிவகார பேரவை என்னும் அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கி வரும் முன்னணி சிந்தனைக் கூடமொன்றின் செயலாளர் நாயகமாக இருக்கின்றார். மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையம் (CSST) சர்வதேச அரசியல் விவகாரங்கள் தொடர்பில் ஆய்வுகளை வெளியிடும் ஒரேயொரு தமிழ் சிந்தனைக்கூடமாகும்.

60 வருடங்களுக்கு முன்னர் கியூப இடதுசாரித் தலைவர் பிடல்காஸ்ரோ அமெரிக்காவின் அச்சுறுத்தலில் இருந்து விடுபடும் நோக்கில் சோவியத் யூனியனிடம் இராணுவ உதவிகளை கோரியிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட சோவியத் தலைவர் கொர்பச்சோ கியூபாவில் அணுவாயுத தளமொன்றை நிறுவினார். அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டனை பார்த்தவாறு அந்த அணுவாயுத தளம் நிறுவப்பட்டது. இதனால் அமெரிக்கா கலக்கமடைந்தது. 60 வருடங்களுக்கு பின்னர் மீண்டுமொரு அணுவாயுத நெருக்கடியை மேற்குலகம் எதிர் கொண்டிருக்கின்றது.



இன்று ரஸ்யாவிற்கு எதிராக உக்ரைன் ஜனாதிபதி மேற்குலகத்தின் இராணுவ உதவிகளை கோருகின்றார். இது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கே அன்றியோ மேற்கொண்டவாறு பதிலளித்திருந்தார்.

நேட்டோ விரிவாக்கம் தொடர்பில் ரஷ்யா தொடர்ந்தும் கலக்கமடைந்திருந்தது. நேட்டோ விரிவாக்கத்தை எதிர் கொள்ளும் ஒரு உத்தியாகவே 2014இல் உக்ரைன் கட்டுப்பாட்டிலிருந்த கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டது. 2014இல் ரஷ்ய ஆதரவு உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்திருந்தார். மேற்கு சார்பான விளாடிமிர் ஸெலென்ஸ்கி வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்தே நிலைமைகள் வேகமாக மாற்றம் அடைந்தன. இவ்வாறானதொரு நிலைமை தொடர்பில் சர்வதேச அரசியல் நிபுணர்களில் முக்கியமானவர்களில் ஒருவராக நோக்கப்படும் அமெரிக்க பேராசிரியரான ஜோன் மியமைர் முன் கூட்டியே எச்சரித்தார்.

2015இல் ரஷ்ய — உக்ரைன் விவகாரம் தொடர்பில் அவர் ஆற்றிய உரையொன்றில் ஐரோப்பா இவ்வாறானதொரு நெருக்கடியை எதிர்கொள்ளும் என்னும் தனது கணிப்பை வெளியிட்டிருந்தார். அதாவது உக்ரைன் ஐரோப்பிய அரசியலில் நடுநிலை கொள்கையை கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறில்லாது ரஷ்யாவிற்கு எதிர்நிலையான முடிவுகளை எடுத்தால் ரஷ்யா நிச்சயம் அதற்கு எதிர் வினையாற்றும் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஒரு பலமான நாட்டுக்கு அருகில் இருக்கும் சிறிய நாடுகள் நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை கடைப்பிடிப்பதே அந்த நாடுகளுக்கு நல்லது. இல்லா விட்டால் குறித்த பலமான நாட்டின் பகையை எதிர் கொள்ள நேரிடும். நேட்டோ உறுப்பு நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் தொடர்ந்து உக்ரைனுக்கு உதவி வருகின்றது. உக்ரைன் ஜனாதிபதி ரஷ்யாவுடன் மோதும் முடிவை எடுத்தமைக்கு மேற்குலகின் ஆதரவே காரணம். மேற்குலகு தன்னை கைவிடாது என்னும் நம்பிக்கையிலேயே அவர் இவ்வாறானதொரு யுத்த முடிவுக்குச் சென்றார். ஆனால் ஆயுதங்களுக்கு அப்பால், மேற்குலக நாடுகள் எதனையும் செய்ய முடியாது. படை நடவடிக்கையில் ஈடுபட்டால் நிச்சயம் இந்த யுத்தம் உலக யுத்தமாக மாற்றமுறுவதை தடுக்க முடியாது. ஏனெனில் ரஷ்யா ஒரு அணுவாயுத நாடு. இந்த பின்னணியில் தான், அணுவாயுத யுத்தமொன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்னும் அச்சங்கள் எழுகின்றன.

இவற்றிலிருந்து நாம் பாடங்களை கற்றுக் கொள்ளவும் இடமுண்டு. பக்கத்திலிருக்கும் பலமான நாடு ஒன்றின் தலையீடு எந்தளவுக்கு முக்கியமானது என்பது தெளிவாகின்றது. பக்கத்திலிருக்கும் பலமான நாட்டை விரோதித்துக் கொள்ளும் போது நாம் நிம்மதியாக இருக்க முடியாது. இந்த அனுபவம் இலங்கைக்கும் உண்டு.

ஈழத்தமிழர்களுக்கும் உண்டு. இது போன்றதொரு வெளிவிவகார சறுக்கலின் விளைவாகத் தான்,ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் மீது இந்திராகாந்தி அதிருப்தியுற்றார். ஆட்சியிலிருக்கும் தலைவர்களின் ஆளுமை அவர்களது எண்ணவோட்டங்களுக்கும் அவர்களது கடுமையான முடிவுகளுக்கும் தொடர்புண்டு. சர்வதேச உறவுகளில் பயன்படுத்தப்படும் றியலிசம் கோட்பாட்டின் படி தனி நபர்களது முடிவுகளும் எண்ணவோட்டங்களும் சர்வதேச அரசியலில் பெரியளவில் செல்வாக்கு செலுத்துகின்றது.

நாட்டின் கட்டமைப்பிலோ கொள்கையிலோ மாற்றங்கள் ஏற்படாத போதிலும் சிலர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோது அந்த நாட்டின் அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது எவ்வாறு இதனை விளங்கிக் கொள்வதில் தான் றியலிசம் நமக்கு கை

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



கொடுக்கின்றது. ரஷ்ய — உக்ரைன் யுத்தத்தில் விளாடிமிர் புடினின் தனிப்பட்ட எண்ணவோட்டங்கள் பெரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாரியளவிலான யுத்தங்களே உலக அரசியலை அசைக்கின்றன. முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களின் விளைவாகவே நாம் தற்போது அனுபவித்து வரும் உலக ஒழுங்கு உருவானது. ஆனால் முன்னர் இருந்தது போன்ற உலக ஒழுங்கு இப்போதில்லை. ரஷ்ய — உக்ரைன் யுத்தம் ஐரோப்பாவின் அரசியலை குழப்பியிருக்கின்றது. ஆசியா இந்த விடயத்தில் அமைதியாக இருக்கின்றது. ஆசியாவின் பிரதான இரண்டு நாடுகளான சீனாவும் இந்தியாவும் ரஷ்ய விடயத்தில் நடுநிலையை கடைப்பிடிக்கின்றன. ஆனால் ரஷ்ய அனுபவம் தாய்வான் விடயத்தில் சீனாவும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்னும் நிலைமையையும் தோற்றுவித்திருக்கின்றது. இன்னும் சில வருடங்களில் தாய்வான் விடயத்திலும் ஒரு யுத்தத்திற்கான கதவு திறக்கப்படவும் வாய்ப்புள்ளது.

இந்த மாற்றங்களில் இருந்து தமிழர்கள் அதிகம் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். கற்றுக் கொள்வதும் ஒரு வகையான தயார்ப்படுத்தல் தான். கற்றுக் கொண்டிருக்கும் சமூகமொன்றில் தான் அதன் முன்னாலுள்ள சவால்களை எளிதில் வெல்ல முடியும்.

## சம்பந்தரின் ஆவேசத்தால் அதிர்ந்தது.......

(7ம் பக்கத் தொடர்ச்சி) எனக் காரணங்களைக் கூறினர். அமைச்சர்கள் இருவரும் ஒவ்வொரு சாட்டுக்களைக் கூறிக் கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து - ஆத்திரமடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேசையில் ஓங்கி தட்டி, எங்களை நாய்கள் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களால் அதிகாரங்களை தர முடியாவிட்டால் எங்களை தனி வழியே விடுங்கள்... காணி பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் பிறகு எதற்கு 13ஆவதுதிருத்தம்...? ,என்று ஆவேசமாகக் கேட்டார்.

வயது மூப்பால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சம்பந்தன் மேசையில் ஓங்கி அறைந்ததும், அவரின் ஆவேச பேச்சாலும் அங்கிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மறுபுறத்தில், சாட்டுக்களைக் கூறிக் கொண்டிருந்த நீதியமைச்சரும், ஜீ. எல்.பீரிஜீம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தனர். தொடர்ந்து, ஜனாதிபதியும் பிரதமரும் அருகிலிருந்த சுமந்திரன் எம். பியும் சம்பந்தனை ஆறுதல்படுத்தினர். இதன்பின்னர், அமைதியாக சம்பந்தன் தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.



மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
ஜாதகம் பார்க்கப்படும்
கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.
குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்
கோ. காசிலிங்கம்
1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)
Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



# ஒரு மாதத்தை கடந்த உக்ரைன் போர் மக்கள் என்ன சொல்கிறார்கள்?

கிருஷன் கௌஷிக்

லிவிவ் பகுதியில் இது பவுடர் ரவர் என்று அழைக்கப்படுகிறது. 16ம் நூற்றாண்டில் துப்பாக்கி தோட்டாக்களுக்கு பயன்படுத்தப்படும் வெடிமருந்துகளையும், ஆயுதங்களையும் சேமித்து வைக்க பயன்படுத்தப்பட்டது. பிறகு அது கட்டுமான கலைக்கான அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது. ஆனால் போர் ஆரம்பமான அன்றே இந்த கோட்டையை தன்னார்வலர்கள் கைப்பற்றியுள்ளனர்.

அப்போது இருந்து இந்த பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள் நன்கொடையாக வழங்கப்பட்ட ஆடைகளை கிழித்து ஒரு பாதுகாப்பு வலையை இந்த கோட்டையை சுற்றி உருவாக்கி வருகின்றனர்.

“உக்ரைன் இறுதிவரை போராட வேண்டும், உக்ரைன் அதன் சுதந்திரத்திற்காக போராட வேண்டும்” என்று தன்னார்வலர்களின் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் 23 வயதான ஒலெக்ஸ ாண்ட்ரா பிலோகூர் கூறுகிறார்.

நாங்கள் வலுவான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றோம் என்பதால் இந்த போரில் நாங்கள் வெற்றி பெறுவோம். எங்களால் இந்த நாட்டில் இருக்கும் எப்பகுதியையும் விட்டுக்கொடுக்க இயலாது ஏன் என்றால் இது எங்களின் நிலம், எங்களில் வீடு இது. இதனை நாங்கள் பாதுகாக்க வேண்டும். இதனை பாதுகாக்க நமது வீரர்கள் உயிரிழந்துள்ளனர் எனவே அரசு இதில் ஏதேனும் சலுகை காட்டினாலும் அது துரோகம் என்றும் குறிப்பிட்டார் ஒலெக்ஸாண்ட்ரா.

பிலோகூரின் வாதத்தையே அங்குள்ள பல மக்களும் பிரதிபலிக்கின்றனர். ஒரு மாதத்திற்கு முன்பு ரஷ்யா, உக்ரைனுக்குள் படையெடுப்பை துவங்கிய போது, ஒரு சிலர் உக்ரைன் இராணுவம், ரஷ்யாவின் மேம்படுத்தப்பட்ட இராணுவ தொழில்நுட்பம் மற்றும் ஆயுதங்களுக்கு எதிராக திறம்பட செயல்பட்டு, ரஷ்யாவின் முயற்சிகளை முறியடிக்கும் என்று எதிர்பார்த்தனர்.

தற்போது லிவிவ் நகரில் உள்ளூர் அதிகாரிகளைக் காட்டிலும், இந்த போரில் போராட அதிகமாக தன்னார்வலர்கள் உள்ளனர் என்று குறிப்பிடுகின்றனர்.

ரஷ்ய ஆக்கிரமிப்பால் பெரிதும் பாதிக்கப்படாத இந்த மாகாணத்தில் 30,000 க்கும் மேற்பட்டோர் ஆயுதப் படைகளில் சேர்ந்துள்ளனர், மேலும் 20,000 பேர் பிராந்திய பாதுகாப்புப் படையில் சேர முன்வந்துள்ளனர் என்று லிவிவ் மாகாண இராணுவ நிர்வாகத்தின்



**ரஷ்ய ஜனாதிபதி அமைதி வேண்டும் என்று கூறினார். உக்ரைனை நேசிப்பதாகவும், உக்ரேனியர்கள் தன்னுடைய சகோதரர்கள் என்றும் கூறிக் கொண்டார். ஆனால் அவர் தான் இறுதியில் இங்கே மிகப்பெரிய அழிவை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர் அவர் தான் என்கின்றார்கள் உக்ரைன் மக்கள்.**

தலைவர் மக்ஸிம் கொஸிட்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுவரை 15800 ரஷ்ய வீரர்கள் போரில் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 108 ரஷ்ய ஜெட் விமானங்கள், 124 ஹெலிகாப்டர்கள், 530 தாங்கிகள் மற்றும் 1567 ஆயுதம் தாங்கிய வாகனங்களை உக்ரைன் படையினர் அழித்துள்ளனர் என்று உக்ரைன் நிர்வாகம் வியாழக்கிழமை அறிவித்துள்ளது. அதே நிலையில் உக்ரைன் எவ்வளவு வீரர்களை இழந்துள்ளது என்று இன்னும் குறிப்பிடவில்லை. 10 ரஷ்யர்களுக்கு ஒரு உக்ரேனி யர் என்ற விதத்தில் ராணுவ வீரர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாங்கள் சர்வதேச உதவியை நம்புகின்றோம். அதைக் காட்டிலும் அதிக மாக உக்ரைன் இராணுவத்தை நம்புகி றோம். அவர்கள் நேட்டோவை நம்புவ தால் அல்ல, மாறாக அவர்கள் தங்கள் நிலத்தை நம்புவதால் நாங்கள் அவர் களை நம்புகின்றோம். எங்களுக்காக மற்ற யாரும் போரடவில்லை அந்த வீரர்கள் தான் போராடுகிறார்கள் என்றும் கோஸிட்ஸ்கி தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்தும் ஆயுதங்கள் வருகின்றன. நாங்கள் அதனை பெறுவதற்காக காத்துக் கொண்டிருக்கின்றோம். தன்னார்வலர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர். எங்களின் வெற்றியை விரைவில் உறுதி செய்வோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு உக்ரைனில் அமைந்திருக்கும் கார்கிவ் பகுதியைச் சேர்ந்த 58 வயது மதிக்கத்தக்க இசைக் கலைஞர் விளாடிமிர் வாண்டராஸ் படையில் சேர்வதற்கு தயார் நிலையில் உள்ளார். போரின் துவக்கத்திலேயே இவரின் நகரம் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில் அங்கே இருந்து தன்னுடைய குடும்பத்துடன் தப்பித்து வந்த விளாடிமிர் வாண்டராஸ் தன்னுடைய மனைவியை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆனால் இராணுவச் சட்டத்தின் காரணமாக அவரால் வெளியேற முடியவில்லை.

ரஷ்ய ஜனாதிபதி அமைதி வேண்டும் என்று கூறினார். உக்ரைனை நேசிப்பதாகவும், உக்ரேனியர்கள் தன்னுடைய சகோதரர்கள் என்றும் கூறிக் கொண்டார். ஆனால் அவர் தான் இறுதியில் இங்கே மிகப்பெரிய அழிவை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர் அவர் தான்.

1991 இல் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு சோவியத் கால உக்ரைனை வாண்டேராஸ் அனுபவித்திருக்கிறார். “தற்போது இது ஜனநாயக நாடு. மக்களுக்கு அதிபரை பிடிக்கவில்லை என்றால் உடனே மாற்றிக் கொள்ளலாம். தங்களின் உரிமைகளை கோரும் சுதந்திரம் இந்த மண்ணில் உள்ளது. ஆனால் ரஷ்யாவில் அனைவரும் புடினின் பேச்சை கேட்க வேண்டும்” என்றும்ம் தெரிவித்தார் வாண்டேராஸ்.

புடினின் கோரிக்கைகளை உக்ரைன் மக்களால் ஏற்க இயலாஅது. எங்களின் விருப்பத்தின் படி இந்த போர் முடிவுக்கு வர வேண்டும். க்ரீமியா உட்பட எங்களின் பிராந்தியங்களில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும். ஒரு வேளை ரஷ்யா இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் நாங்கள் தொடர்ந்து போராட தயார் என்றும் அவர் கூறினார்.

48 வயதான க்ராவ்சுக் கிராஸ்வான், கெர்சனைச் சேர்ந்த உக்ரேனிய இராணுவத்தில் ஒரு மதகுருவாக உள்ளார். உக்ரைன் போரில் வெற்றிபெற முடியும் என்று நம்புகிறீர்களா என்று கேட்டதற்கு, “நிச்சயமாக” நம்பிக்கையுடன் பதில் அளிக்கிறார்.

பாதுகாப்பிற்காக நாட்டை விட்டு வெளியேற மக்கள் கூட உக்ரைன் சரணடையக் கூடாது என்று விரும்புகின்றனர். தலைநகர் கிவ்வில் தன்னுடைய கணவரையும், வீட்டையும் விட்டு, வார்சாவில் இருந்து தன்னுடைய குழந்தைகளுடன் ஜெர்மனிக்கு செல்லும் ஸ்வெட்லானா வாசிலென்கோ, உக்ரைன் எங்களின் சுதந்திரத்திற்காக போராடி அதில் வெற்றி பெறும் என்று கூறினார்.

தன்னுடைய கணவர் போரில் ஈடுபட்டு வருவதாகவும், மக்கள், குறிப்பாக குழந்தைகள் இறப்பதை விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இதையே தான் ல்விவின் மேயர் ஆண்ட்ரி சதோவ்யியும் கூறுகிறார்.

உக்ரேனியர்களாக, ஒரு அரசாகவும், தேசமாகவும், அடுத்த நூறு ஆண்டுகள் நிம்மதியாக வாழ்வதற்கான கடைசி வாய்ப்பை கடவுள் நமக்கு அளித்துள்ளார். எதிரிகளை விரட்டியடித்த தங்கள் முன்னோர்களைப் பற்றி உக்ரேனியர்கள் அன்று பெருமைப்படுவார்கள் என்று அவர் கூறுகிறார்.

போர் முடிந்து ஒரு மாதம் ஆன நிலையில் உங்களை மிகவும் பாதித்த நிகழ்வு எது என்று கேட்ட போது, கடந்த வாரம் அங்கே உருவாக்கப்பட்ட ஒரு நினைவு சின்னத்தை காட்டினார். குழந்தைகளை வைத்து செல்லும் 108 தள்ளு வண்டிகள் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும், போரில் பலியான சின்னஞ்சிறு குழந்தைகளின் நினைவாக வைக்கப்பட்டுள்ளது. “இன்று வரை 117 குழந்தைகள் சொர்க்கத்தில் இருந்து எங்களை பாதுகாத்து வருகின்றனர்” என்று அவர் மனம் உடைந்து பேசினார்.



கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தின் “ஜோதி விழா” எதிர்வரும் யூலை 30, 31 -2022
காதுக்கு விருந்தளிக்கும் கனடிய - தமிழகப் பாடர்களின் இசை நிகழ்ச்சிகள் நாவுக்கு சுவையூட்டும்
இலங்கை இந்திய உணவுச் சாவடிகளுடன் மாபெரும் ஜோதி விழா தொடர்புகளுக்கு 416 321 6104

# பிரதமர் மோடி வராதது ஏன்?

ஐந்தாவது பிம்ஸ்டெக் உச்சி மாநாடு எதிர் வரும் 30ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கு இது ஏமாற்றமளிக்கும் ஒன்றாகவே அமைந்திருக்கிறது. பிம்ஸ்டெக் எனப்படும் வங்காள விரிகுடா நாடுகளின் பல துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பில், இலங்கை, இந் தியா,நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மியான்மார், தாய்லாந்து என 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 1997இல் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு தற்போது விரிவாக்கப்பட்டு, பாகிஸ்தானும் அங்கம் வகிக்கும் சார்க் அமைப்புக்கு மாற்றான ஒன்றாக இந்தியாவினால் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த அமைப்பின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம், அதற்கு தலைமையேற்கும் வாய்ப்பை பெற முடியும் என்றும், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை அழைத்து, உதவிகள், ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

அந்த எதிர்பார்ப்புக்கு அமைய பிம்ஸ்டெக் மாநாடு அமையவில்லை. பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக நாளை பிம்ஸ்டெக் நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளர்களின் மாநாடும், மறுநாள் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடும் நடக்கவுள்ளன. இந்த இரண்டு கூட்டங்களிலும் 7 உறுப்பு நாடுகளினதும் வெளிவிவகார அமைச் சர்கள், வெளிவிவகாரச் செயலாளர்கள் பங்கேற்கின்றனர்.

ஆனால், பிம்ஸ்டெக் அமைப்பின் ஏழு உறுப்பு நாடுகளில், தாய்லாந்து பிரதமர் பிரயூ த் சான் ஓ சா தவிர வேறெந்த நாட்டின் தலைவரும், நேரடியாகப் பங்கேற்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

நேபாளப் பிரதமர் ஷேர் பகதூர் டூபா இந்த மாநாட்டில் பங்கேற்க கொழும்பு வருவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த திங்கட்கிழமை கூடிய நேபாள அமைச்சரவைக் கூட்டத்தில், பிரதமர் டூபா பிம்ஸ்டெக் மாநாட்டில், நேரடியாகப் பங்கேற்பதில்லை என்றும், மெய்நிகர் தொழில்நுட்பம் மூலமாகவே பங்கேற்பார் என்றும் முடிவு செய்யப்பட்டது.

முன்னதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மாநாட்டில் பங்கேற்க 30ஆம் திகதி இலங்கை வருவார் என்று கூறப்பட்டது.

அவர் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கி, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார நிலையத்தை திறந்து வைத்த பின்னர், கொழும்பு சென்று மாநாட்டில் பங்கேற்பார் என்றும் தகவல்கள் வெளியாகின. ஆனால் இந்தியத் தரப்பு அந்தப் பயணத் திட்டத்தை கடைசி நேரத்தில் இரத்துச் செய்து விட்டது.

தாய்லாந்து தவிர ஏனைய நாடுகளின் தலைவர்கள் மெய்நிகர் முறையிலேயே பங்கேற்பார்கள் என்று வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார். எனினும், இந்தியப் பிரதமரின் பயணத் திட்டம் குழப்பம் அடைந்தமைக்கான காரணம், அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை. பிம்ஸ்டெக் மாநாட்டில் நேபாளப் பிரதமர் மட்டும் ஆரம்பத்தில் பயணத்தை உறுதிப்படுத்தியிருந்தார்.

ஏனைய தலைவர்கள் இழுத்தடித்து வந்த நிலையில், இரண்டு மூன்று தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் மாநாட்டில் பங்கேற்பதை புதுடில்லி விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. சர்வதேச அரங்கில் இந்தியா மிக முக்கியமானதொரு சக்தியாக வளர்ந்திருக்கிறது. அவ்வாறான நிலையில் இந்தியப் பிரதமர் மோடி ஒரு முழுமையற்ற உச்சி மாநாட்டில் பங்கேற்பது அவரைத் தரமிறக்கும் என்று இந்திய கொள்கை வகுப்பாளர்கள் கருதியிருக்கலாம்.

பிம்ஸ்டெக் அமைப்பு இந்தியாவுக்கு முக்கியமானதென்றாலும், அந்த கூட்டத்துக்கான அழைப்பு உள்ளிட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தினால் தான் மேற்கொள்ளப்பட்டன. எனவே, இந்தியா உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு நேரடியாக அழுத்தங்



களைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. பிம்ஸ்டெக் மாநாட்டைத் தவிர, யாழ்ப்பாண கலாசார நிலையத்தை திறந்து வைத்தல் உள்ளிட்ட இந்தியப் பிரதமருக்கு தவிர்க்க முடியாத நிகழ்ச்சி நிரல்களும் இருந்தாலும், இலங்கைப் பயணத்தை இந்தியப் பிரதமர் தற்போதைக்கு நிறுத்தி வைக்க வேறொரு காரணமும் இருந்தது. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியே அது. பொருளாதார நெருக்கடிகளால், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. நாடு முழுவதும், அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆங்காங்கே தீப்பந்த போராட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்கள் நடக்கின்றன. இரண்டு பெரிய ஆர்ப்பாட்டப் பேரணிகள் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டும் நடத்தப்பட்டன.

நுகேகொடவில் மற்றொரு பாரிய பேரணி நடந்திருக்கிறது. அவ்வாறான ஒரு பேரணியைக் காரணம் காட்டியே கடந்த 15ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தவிருந்த சந்திப்பை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரத்துச் செய்திருந்தார். சஜித் பிரேமதாசவின் பேரணியை காரணம் காட்டி கூட்டமைப்புடனான சந்திப்பை இரத்துச் செய்த தன் நேரடி விளைவுகளில் ஒன்று தான் இந்தியப் பிரதமரின் பயணம் இரத்துச் செய்யப்பட்டதாகும்.

ஏனென்றால் பிம்ஸ் டெக் மாநாடு நடக்கப் போவது, ஜனாதிபதி செயலகத்தில் தான். அதனை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான காட்சிகள் உலகளவில் ஊடகங்களால் பெரியளவில் எடுத்துச் செல்லப் பட்டது.

ஆவேசம் கொண்டவர்கள் ஜனாதிபதியின் உருவபொம்மையை, சவப்பெட்டியை தீக்கிரையாக்கியது, ஜனாதிபதி செயலகத்தை ஊடறுக்க முயன்றது போன்ற சம்பவங்களை அதிரடிப்படையினரைக் கொண்டு அரசாங்கம் அடங்கியிருந்தாலும் அதுதொடர்பான காட்சிகள் இந்தியப் பிரதமருக்கு தெளிவான படத்தை காண்பித்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் கொழும்பு வந்திருக்கும் போது இவ்வாறான போராட்டங்கள், முற்றுகைகள் நடத்தப்பட்டால், அது அவரது பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பது அவரது மெய்க்காவல் அணியினராலும், புலனாய்வு அமைப்புகளாலும் சுட்டிக்காட் டப்பட்டிருக்கும்.

அதைத் தாண்டி இலங்கை அரசின் மீதான வெறுப்பை வெளிக்காட்டும் பேரணிகளின் போது, இந்தியப் பிரதமருக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்படலாம். அது இந்தியாவுக்கு சங்கடத்தையும் தேவையற்ற பிரச்சினையையும் ஏற்படுத்தும். இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, 2.4 பில்லியன் டொலர்களை 3 மாதங்களில் வழங்கியுள்ள இந்தியா, தடைப்பட்டுப் போயிருந்த தமது திட்டங்களை தற்போது முன்னெடுப்பதற்கு வழியை ஏற்படுத்தியுள்ளது.

இதனை விரும்பாத சக்திகள், அரசாங்கத்துக்குள்ளேயும் இருக்கின்றன வெளியேயும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் இந்தியப் பிரதமரின் பயணத்தை அவ்வாறான சக்திகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளும் இருந்தன. இப்போது பொருளாதார நெருக்கடி, மற்றும் அரசியல் கொந்தளிப்பு காணப்படுவது போல, 1987இல் இலங்கையில் மிக மோசமானதொரு நிலை காணப்பட்டது.

அப்போது தெற்கில் அரசுக்கு எதிரான ஜே.வி.பி. கிளர்ச்சி தீவிரமடைந்து கொண்டிருந்தது. வடக்கில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்திருந்தன. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியா அமைதி உடன்பாட்டை செய்து கொள்வதற்கு தமிழர் தரப்பின் மீது அழுத்தங்களைக் கொடுத்தது.

அந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொழும்பில் வந்திறங்கிய போது பல இடங்களில் வன்முறைகள் இடம் பெற்றன. ஆர்ப்பாட்ட பேரணிகள் நடந்தன. சில இடங்களில் தீவைப்புகள் போன்ற கலவரங்களும் இடம்பெற்றன. உடன்பாட்டில் கையெழுத்திட்ட பின்னர், அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரி

**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**



யாதையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடற்படைச் சிப்பாய் ஒருவரினால் தாக்கப்பட்டார். அந்த உடன்பாட்டுக்குப் பின்னர், இந்தியா எதிர்கொண்ட நெருக்கடிகளும், இலங்கையில் தீவிரமடைந்த கலரவங்களும் மறைக்க கூடியவையல்ல. தற்போதைய சூழல் அப்போதைய நிலையுடன் ஒப்பிடக் கூடியளவுக்கு மோசமடையா விட்டாலும், அந்த நிலை ஏற்படாது என்று உறுதியாக கூற முடியாது.

ஏனென்றால் மக்கள் பொறுமையின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறானதொரு கொதிநிலையில் இந்தியப் பிரதமர் இலங்கையில் கால்வைக்க விரும்பியிருக்க மாட்டார். என்னதான் இந்தியாவுக்கு, இலங்கை முக்கியமான கூட்டாளியாக இருந்தாலும், இந்தியா அதனை விட தனது கௌரவமும், பாதுகாப்பும் முக்கியம் என்றே கருதும். அதற்கே முன்னுரிமை கொடுக்கும். அதற்கமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கும்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
கனடா மிஸசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## திருமதி அங்கயற்கண்ணி குமாரசாமி

எங்கள் குடும்பத்தின் தலைவியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை வாழ வைத்த தெய்வம் எங்கள் அன்னை திருமதி அங்கயற் கண்ணி குமாரசாமி அவர்களது மரணச் செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்

தூர தேசங்களில் இருந்து தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் பூதவுடல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்ட போது நேரில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தியவர்களுக்கும், மலர் மாலை அணிவித்தும் மலர் வளையம் சாத்தியும் அஞ்சலி செலுத்தியவர்களு க்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவியும். ஒத்தாசை யும் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



புங்குடுதீவு இறுப்பிட்டி 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த
யாழ்.பல்கலைக்கழக
முன்னாள் சிரேஷ்ட பொருளியல் துறை விரிவுரையாளர்

## உயர்திரு பேரின்பநாதன் நல்லதம்பி

யாழ். புங்குடுதீவு இறுப்பிட்டி 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு யாழ். வண்ணை நாச்சிமார் கோவிலடி, கொக்குவில், கனடா Toronto, Ajax ஆகிய இடங் களை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு பேரின்பநாதன் நல்லதம்பி அவர்கள் 24 மார்ச் 2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி நல்லதம்பி செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் திரு திருமதி தம்பிராசா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும்

சறோஜினிதேவி (சறோ) அவர்களின் அன்புக் கணவரும்

நிவேதிதா, நிர்த்தனன் ஆகியோரின் ஆசை அப்பாவும்

சோபன், ரெறோனியா ஆகியோரின் அன்பு மாமாவும்

வில்வநாதன், புஷ்பவதி, சண்முகநாதன், சிறிகந்தநாதன், சற்குணநாதன் ஆகியோரின் அருமை அண்ணனும்

காலஞ்சென்றவர்களான நடராசா, மங்கையற்கரசி மற்றும் லீலாவதி, கிருபானந்தன், யோகராஜா, தனலட்சுமி, காலஞ்சென்ற தெய்வேந்திரன், சுமங்கலா, பரிமளபவானி, கவிதா ஆகியோரின் அருமை மைத்துனரும்

றியான், றிசியா, எலிசா, எலாயல் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் **02 Apr 2022 Saturday 6:00 PM - 9:00 PM Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave- Markham- ON L3R 5G1 Canada** இல் பார்வைக்கு வைக்கப்பட்டும் மறுநாள் **03 Apr 2022 Sunday 10:00 AM - 10:30 AM** பார்வைக்கு வைக்கப்பட்டு அதே இடத்தில் காலை *10.30* மணி முதல் *12.00* மணி வரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் *1.00* மணிக்கு **Highland Hills Crematorium 12492 Woodbine Avenue- Gormley- Ontario- L0H 1G0- Canada** இல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியையில் பங்கு கொள்ளும் அனை வரும் முககவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்பதை அறியத் தருக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**

சறோஜினிதேவி (மனைவி) 416 2652263
நிவேதிதா (மகள்) 416 8885399
நிர்த்தனன் (மகன்) 6475002263 சோபன் (மருமகன்) 416 8211293
வில்வநாதன்(சகோதரன்) 94777703907
புஷ்பவதி (ஞானம்- சகோதரி) 442082004803
சண்முகநாதன் (சகோதரன்) 4166063580
சிறிகந்தநாதன் (சகோதரன்) 12892425985
சற்குணநாதன் (சகோதரன்) 647 3238416




இலங்கையில் இடதுசாரி அரசியல் வரலாற்றில் அமரர் கார்த்திகேயன் மாஸ்ரர் அவர்களை அறியாதவர்கள் இருக்க முடியாது. அவர் ஒரு தலைசிறந்த ஆங்கில ஆசிரியர் மட்டுமின்றி அவர் இடையிடையே கூறும் நகைச்சுவைத் துணுக்குகள் சிரிக்க வைப்பது மட்டுமின்றி சிந்திக்கவும் வைக்குமளவுக்கு ஆழமானவை.

அத்தகைய நகைச்சுவைத் துணுக்குகளில் ஒன்றைத் தற்சமயம் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அதாவது “இந்தியாவில் கோவில்களிலுள்ள தங்கத்தைக் கொள்ளையடிக்க கஜினி முகமது 14 தடவைகள் படையெடுத்தும் அதில் அவனால் வெற்றி பெற முடியவில்லை. ஆனால் ஜவகர்லால் நேரு ஒரேயொரு போருடன் இந்தியக் கோவில்களின் தங்கத்தைக் கைப்பற்றிவிட்டார். கோவில் ஆதீனங்களும் மடாலயங்களும் தாங்களாகவே கொண்டு போய்க் கொடுத்து விட்டனர். 1962 இடம்பெற்ற சீன இந்திய எல்லைப் போர் என்பது தான் அது.

அதாவது ஆட்சியாளர்கள் தேசத்தின் பேராலும் தேசத்தின் பாதுகாப்பு என்ற பேரிலும் மக்களிடமிருந்து வரிகள் மட்டுமின்றி அன்பளிப்பாகவும் தேசபக்தியின் பெயராலும் விதம்விதமான கொள்ளைகளையும் நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில் இலங்கையில் அண்மையில் பதவி பெற்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் உரையாற்றும் போது தென்கொரியா பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்த போது மக்கள் தாங்கள் தாங்களாகவே நகைகளைக் கொண்டு சென்ற கொடுத்து நாட்டைக் காப்பாற்றினர் எனக் கூறியிருந்தார். அடுத்து உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தாங்கள் அதற்காக மக்களிடம் தங்கத்தைக் கேட்கவில்லையெனவும் அந்தக் கொரிய மக்களின் நாட்டுப் பற்றை விளங்கப்படுத்தவே அது பற்றிக் கூறியதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இலங்கையில் அரிசியில் கோதுமை மாவில் பால்மாவில், எரிபொருளில் சமையல் எரிவாயுவில் என எல்லாவற்றிலுமே கை வைத்துவிட்ட அரசாங்கம் தங்கத்தில் மட்டும் கை வைக்காது என எப்படிச் சொல்லிவிட முடியும்? ஏற்கனவே ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒன்றரை இலட்சம் வரை ஏறிவிட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நாடு மீளமுடியாத நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மக்கள் அதிலிருந்து மீள அர்ப்பணிப்புடன் உழைப்பது அப்படியொன்றும் அதிசயமுமல்ல, உலகில் எங்கும் நடைபெறாமலும் இல்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம் பெற்ற நாட்களில் விடுதலைப் புலிகள் மக்களிடம் வீட்டுக்கு 2 பவுண் கோரினர் சிலரிடம் வலிந்தே பெற வேண்டியிருந்த போதிலும் பெரும்பாலோனோர் தாமாக விரும்பியே கொடுத்தனர். ஒரு தொகுதி மக்கள் தங்கள் விடுதலையை நேசித்தபோது அதற்காக எதையும் அர்ப்பணிக்கத் தயங்க மாட்டார்கள் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணமாகும்.

தங்களது உயிர்த் தியாகங்கள் நிதி, வழங்கல் உள்ளிட்ட அர்ப்பணிப்புகள் தங்கள் தேசத்தின் நலன்களுக்கோ அல்லது இன விடுதலைக்காகவோ பயன்படுமென மக்கள் கருதும் போது அவர்கள் எவ்விதமான இழப்புகளுக்கு முகம் கொடுக்கத் தயங்குவதுமில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது சோவியத் யூனியன் ஆண்களில் பெரும்பாலானோர் ஜேர்மன் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட களமுனைக்கு வந்து விட்டனர். உற்பத்திப் பணிகளில் பெண்களே முழுமையாக இறங்கி நாட்டினதும் களமுனையினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர். நாட்டுக்கு ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்ற பேதமின்றி வழங்கிய அர்ப்பணிப்புகளாலேயே ஜெர்மனியைத் தோற்கடித்து இளம் சோவியத் நாட்டைக் காப்பாற்ற முடிந்தது.

அதே போன்று 1960ம் ஆண்டு காலப் பகுதியில் சோவியத் ஒன்றியத்துக்கும் சீனாவுக்குமிடையே ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக சோவியத் நாடு தனது சீனாவுக்கான சகல உதவிகளையும் நிறுத்தியது. அந்த நேரத்தில் சீனத் தலைவர் மாஓசேதுங் சீன மக்களிடம் “யாங்ஷி நதியின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க சீன தேசத்தை மின்சார மயப்படுத்துவோம்” என்ற அறைகூவல் விடுத்தார்”.

அவரின் அறைகூவலை ஏற்ற சீன மக்களில் 5 இலட்சம் பேர் இரு வருடங்கள் தொடர்ச்சியாக உணவையும், உடையையும் மட்டுமே பெற்றுப் பணியாற்றினர். யாங்ஷி நதிக்குக் குறுக்காகப் பிரமாண்டமான அணை கட்டப்பட்டது. அதனால் யாங்ஷி ஆறு திசை திருப்பப்பட்டு உற்பத்தி பெருக்கப்பட்டது. சீனாவின் பெரும் பகுதி மின்சார மயப்படுத்தப்பட்டது.

வறுமையிலும் பட்டினிச் சாவிலும் அவஸ்தைப்பட்ட சீனா இன்று உலகின் முக்கிய பொருளாதார, அரசியல், இராணுவ வல்லரசாக எழுச்சி பெற்று நிற்கிறது.

விடுதலைப் புலிகளின் போரில் மக்களின் பங்களிப்பு, சீனா சோவியத் நாடு ஆகிய நாடுகளின் மக்கள் தன்னலம் கருதாது வழங்கிய உழைப்பு என அனைத்து மக்களின் அர்ப்பணிப்புகளும் முழுத் தேசத்தின் நலன்களுக்கே பயன்படும் என மக்கள் கருதியபோது அவர்கள் தயங்காமல் களமிறங்கினர்.

இலங்கையிலும் அப்படியொரு நிலைமை ஏற்படுமானால் தங்கமென்ன இருப்பவற்றையெல்லாம் அள்ளிக் கொடுத்து நாட்டை நெருக்கடியிலிருந்து காக்கத் தயங்கப் போவதில்லை.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் மீதும் மக்களுக்கு அரச இயந்திரத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

2015இற்கு முற்பட்ட காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களே இப்போதும் அரச அதிகாரத்தில் உள்ளனர். தற்போது ஜனாதிபதியாயிருக்கும் கோத்தபாய ராஜபக்ஷ் அரசாங்கத்துக்கு வர வேண்டிய 110 கோடிகளை தனியார் நிறுவனம் கொள்ளையடிக்க உதவி செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ் தேர்தல் காலத்தில் பஞ்சாங்கம் அடித்து விநியோகித்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இப்படிப் பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்குகள் போடப்பட்டிருந்தன. இப்படியான சகல வழக்குகளும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டன. அது மட்டுமின்றி நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட பலர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படி ஒரு சிலரின் நலன்களைப் பாதுகாக்க நீதி நியாயம் என அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு ஊழல், மோசடி அதிகார துஷ்பிரயோகம் என்பன இயல்பானவையாக மாறிவிட்ட நிலையில் மக்கள் நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணிக்கத் தயாராவார்களா?

அதை விளங்கித் தான் போலும் ஜீ.எல். பீரிஸ் தாங்கள் மக்களிடம் தங்கம் கேட்கப் போவதில்லையெனக் கூறியுள்ளார்.

நாட்டுக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயாரான மக்கள் தனி நபர்களின் மோசடிகளுக்கு பலி போக தியாகம் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

**நா.யோகேந்திரநாதன்**

# ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு! தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு தருமா?

(9ம் பக்கத் தொடர்ச்சி) வடக்கு கிழக்குக்கான நிதியம் ஸ்தாபிப்பதே ஆரோக்கியமான செய்முறையாகும். சிரான் அமைப்பினதும் முன்னாள் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் நிதியம் தொடர்பிலான அனுபவத்தை தமிழ் தரப்பு முதன்மைப்படுத்த வேண்டும். அத்தகைய அனுபவம் மிக அவசியமானதாகவே காணப்படுகிறது.

எனவே எதுவும் வழங்கக் கூடாது என்பதற்காகவே இலங்கை ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தைகளை தொடக்குவது என்ற பலவவீனமான முன் அனுபவத்தைக் கொண்டு தற்போதைய பேச்சுவார்ததை அணுகப்பட வேண்டும். திட்டமிட்டு உத்திகளை வகுத்து விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு அதற்கு அமைவாக பேச்சுவார்த்தைகளை எதிர்கொள்வதே அவசியமான செய்முறையாகும்.

காணி தொடர்பில் ஜனாதிபதியின் வெளிப்படுத்திய உச்சரிப்பு பேச்சுக்கள் எந்த விளைவையும் தமிழ் தரப்புக்கு தராது என்பதைக் காட்டுகிறது. அதற்கு ஏற்ற வகையிலேயே தமிழ் தரப்பின் நகர்வுகளும் தென்படுகிறது. எனவே அடுத்த கட்ட உரையாடலுக்கு தயாராக வேண்டும் என்பதும் அதற்கான தகவல்கள் திரட்டப்படுவதுடன் அதனை ஆதாரப்படுத்தும் பணிகளும் முக்கியமானவையாகவுள்ளன.

அரசியல் தீர்வு பொறுத்து உரையாடும் போது இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளின் பிரசன்னமும் ஒத்துழைப்பும் தவிர்க்க முடியாதது என்பதை தமிழ் தரப்பு உணர்ந்து செயல்பட வேண்டும். மூன்றாம் தரப்பின் பிரசன்னமே பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த வழிவகுக்கும்.

Toronto thiruchendur murugan temple
றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்
19 Penn Dr, North York, ON M9L 2A6. 416 744 9568
www.ttmtemple.com - Email: info@ttmtemple.com

றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய மகாசபை கூட்டம் பற்றிய அறிவித்தல்

24/02/2022

றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிரந்தர அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது.

எமது ஆலய பொதுக்கூட்டம் எதிர் வரும் சித்திரை மாதம் 17/04/2022 ஞாயிற்றுக்கிழமை பிறப்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைகூட்டத்தில்

- ✓ வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்
- ✓ ஆலய அடைமானக்கடனை திரும்ப செலுத்துவற்கான பொறுப்பேற்றல்
- ✓ எதிர் வருங்காலங்களில் புனரமைப்பு பணிகள் பற்றிய கலந்துரையாடல்
- ✓ புதிய நிர்வாகசபை தேர்வு
- ✓ உப நிர்வாகசபை தேர்வு

என்பன இடம் பெறும்

அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் இதுவரை அங்கத்தவர்கள் ஆகாதவர்கள் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு**
அங்கத்துவம் தனிநபருக்கானதே தவிர குடும்பத்தினருக்கானது அல்ல ஒரு அங்கத்துவ கட்டணம் தனி ஒரு நபருக்கானதே என்பதனையும் அறியத்தருகின்றோம்

மகாத்மநாதன் கதிர்காமநாதன்
செயவாலர்
றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

24/02/2022

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவர். வாக்கு வன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். பணி நிமித்தமாக பயணம் செல்ல வேண்டி வரலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் உங்களுடன் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். பெண்கள் மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.




கன்னிராசி அன்பர்களே! மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். சுக்கிரன் சஞ்சாரம் வாக்கு வன்மையால் ஆதாயத்தை பெற்று தரும். உயர்மட்ட பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும் எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். சரக்குகளை வாங்கும்போது கவனித்து வாங்குவதும், பாதுகாப்பாக வைப்பதும் நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். மருத்துவ செலவு ஏற்படும்.




தனுசுராசி அன்பர்களே! நிதானமாக எந்த முடிவையும் எடுப்பீர்கள். நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். சுக்கிரன் சஞ்சாரத்தால் வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும்.




ரிஸபராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்கள் செய்ய தயங்கும் வேலையை செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த ஊடல்கள் நீங்கும். பெண்கள் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பர்.






மகரராசி அன்பர்களே! சுபகாரியங்கள் நடைபெறும். பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். எதிலும் திருப்தி இல்லாத மனநிலை இருக்கும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். முயற்சிகள் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புதுவியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். மாணவர்கள் பதற்றம் கொள்ளாமல் நிதானமாக பாடங்களை படிப்பது நல்லது.




மிதுனராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேலோங்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் எதிர்பார்த்த பண வரவு இருக்கும். வீட்டிற்கு தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மனை வாங்குவதற்கான தடைகள் அகலும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை பகைத்து கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும்.




துலாம்ராசி அன்பர்களே! முடங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர்.மனதில் இருந்து வந்த சஞ்சல மனநிலையில் மாற்றம் இருக்கும். பணநெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். கணவன், மனைவிக்கிடையே இருந்த குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வியில் அக்கறை தேவை.




கும்பராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். அதிக கோபத்தால் வீண்பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. சுக்கிரன் சஞ்சாரம் ஆடம்பர செலவுகளை ஏற்படுத்தும். பயணத்தால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். தேவையான பணஉதவி கிடைக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல்சோர்வு உண்டாகலாம். சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் மன அமைதி கிடைக்கும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! தைரியமாக செயல்படுவீர்கள். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. சுக்கிரன் சஞ்சாரத்தால் வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலைதூக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கும். தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவ குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனவருத்தம் உண்டாகலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது. பெண்களுக்கு கடன் விஷயங்களில் கவனம் தேவை. எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும்.




விருச்சிகராசி அன்பர்களே! சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் ஸ்தானத்தில் குரு இருப்பதால் தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவர். நீண்ட நாட்களாக இருந்து வந்த கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. பெண்களுக்கு எதிர்ப்புகள் நீங்கும். ராசிநாதன் சுக்கிரனின் சஞ்சாரத்தால் நல்ல பலன்களே வரும்.




மீனராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். சூரியன் சஞ்சாரத்தால் வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்களுடன் வீண்பகை உண்டாகலாம் கவனமாக பேசுவது நல்லது. சுக்கிரன் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவர். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்பட்டாலும் மனதில் இறுக்கம் இருக்கும். பெண்கள் பயணங்கள் செல்ல நேரலாம்.




சிம்மராசி அன்பர்களே! தைரியம் அதிகரிக்கும். ஜீரண கோளாறுகள் ஏற்படலாம். உடல்சோர்வு உண்டாகும். பணம் பல வழிகளிலும் செலவாகும். காரியதாமதம் ஏற்படும். அடுத்தவர்களுக்காக எந்த உத்தரவாதமும் கொடுக்காமல் இருப்பது நல்லது. நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகத்தில் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். பெண்களுக்கு செலவு அதிகரிக்கும். நன்கு உழைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். கவலையை தவிர்த்து கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் இருக்கும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
ஒரு மேடையில் இரு நிகழ்வுகள்
ஈழத்து - தமிழக இசை வேந்தர்கள்!
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022 மாலை 5.00 மணி

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும் ஐயப்பன் விரத மாலை அணிதலும்

**காலம்: 31.03.2022 வியாழக்கிழமை முதல் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வரை**

**"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்! என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"**

ஐயப்பன் மெய்யடியார்களே!

மகர மண்டல விரதத்திற்கு மாலை அணிந்து விரதமிருப்பதைப் போன்று விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணிந்து விரதமிருக்கின்ற மரபு ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் சிறப்பு நடைமுறையாகும்.

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடை வரை காலை, மாலை சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, படிப்பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி புறப்பாடு என்பன நடைபெற உள்ளதால், அடியார்கள், மாலை அணிந்து விரதமிருக்கும் சுவாமிமார்கள், தினமும் காலை, மாலை திருவிழா உபயம் செய்வோர் ஆலயத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### உற்சவ கால நிகழ்ச்சி நிரல்

சிறப்பு அபிஷேகம் காலை 10:00 மணிக்கும், மாலை 6:00 மணிக்கும், காலைப் பூஜை 11:00 மணிக்கும், மாலைப்பூஜை 7:30 மணிக்கும், சுவாமி புறப்பாடு மதியம் 12:00 மணிக்கும், மாலை 8:30 மணிக்கும் நடைபெறும்.

### விசுக்கனி ஸ்ரீ ஐயப்பன் விரத மாலையணிதல்

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிமுதல் மதியம் வரை,
மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணிவரை
விசுக்கனிக்காக ஐயப்பன் விரத மாலை அணிந்து கொள்ளும் சுவாமிமார்கள் ஆலய குருசுவாமி கைகளால் மாலை அணிந்து கொள்ளலாம்.

### நெய் நிரப்புதல்

10.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி முதல் மதியம் வரை நெய் நிரப்புதல் வைபவம் இடம்பெறும்

### சுவாமிமார்களின் நெய்யபிஷேகம்

14.04.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு இருமுடி சுமந்து, 18 படிகள் ஏறி சுவாமிமார்களின் நெய்யபிஷேகம் நடைபெறும்.
புதுவருடப்பிறப்புப் பூஜை 13.04.2022 புதன்கிழமை மாலை 10:19 மணிக்கு நடைபெறும்.
14.04.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், புதுவருட பூஜையும் இடம் பெறும்.

இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்



# Amma Pawn Broker
# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



## அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

Ravi. Paramu
Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE



• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!



ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS
KABIS & ASSOCIATES INC.

• Life Insurance
• Critical Illness
• Disability
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
• RESP
• RRSP

Foresters IA INDUSTRIAL ALLIANCE Assumption Life



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE
HIGHER STANDARDS

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001



TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500





காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்

ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி

DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.

647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7